கடவுள் துணை.

மருமக்கள் துயர அம்மானை.

இஃது,

சித்திரக்கவி

செஞ்சிமாநகரம்

ஏகாம்பரமுதலியாரவர்களால்

இயற்றப்பட்டு,

ம-ா-ள-ஸ்ரீ,

தி. சின்னசாமிப்பிள்ளையவர்களால்

பார்வையிட்டு,

பூவிருந்தவல்லி

சுந்தரமுதலியார் குமாரர்

பூ. சு. குப்புசாமி முதலியாரது

ஸ்ரீசுந்தரவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1906,

சென்னை: புரசை;

REGISTERED COPY RIGHT.

கடவுள் துணை.

மருமக்கள் துயர அம்மானை

அட்டவணை.

1. கதையின்வரலாறு.
2. கமலம்பாள்துயரம்,
3. காந்திமதிதுயரம்.
4. பத்மாவதியின்துயரம்.
5. மயிலாப்பூர்மரகதவல்லியின்துயரம்.
6. சென்னைமீனுள்துயரம்.
7. மாமியாராகியகிழவிதான்வாழ்ந்ததைகூறல்.
8. கிருஷ்ணம்மாள்துயரம்.
9. மதனசுந்தரிதுயரம்.
10. குணபூஷணியின்துயரம்.
11. பொதுஞாயங்கூறல்.

கடவுள் துணை.

ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகலருக்குந் தெரிவிப்பது யாதெனில்! இந்த (மருமக்கள் துயர அம்மானை) என்னும் புத்தகத்தை செஞ்சி-ஏகாம்பர முதலியாரவர்களால் எழுதி முடிவுபெற்றதை சென்னை புரசைவல்லம்பங்காருசெட்டி வீதி 4-வது நெம்பர் வீட்டிலிருக்கும் பூ. சு. குப்புசாமிமுதலியார். ஷையாருக்குப் பொருளுதவி புரிந்து சகலசுதந்தரமும் பெற்றுக்கொண்டமையால் இது ஷை பூ. சு. குப்புசாமி முதலியார். அனுமதியின்றியாவரும் எவ்விதத்தும்அச்சிடாவண்ணம் கனம் பொருந்திய கெவ்ர்மெண்ட் சட்டப்படி (ரிஜிஸ்தர் காபிரயிட்)

(REGISTERED COPY RIGHT) செய்யப்பட்டிருக்கிறது.

இப்புத்தகம் தேவையானவர்கள் மேல்கண்ட பூ. சு. குப்புசாமிமுதலியாரிடம் விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

இப்படிக்கு,

பூ. சு. குப்புசாமி முதலியார்.

ஸ்ரீசுந்தரவிலாசம் பிரஸ்;—பிரம்பூர் பாரக்ஸ்போஸ்ட் மதராஸ்.

கடவுள் துணை.

மரும க்கள் துயர

அம்மாவன.

விநாயகர் வணக்கம்.

விருத்தம்.

அருமைசேர்மாமிவீட்டி லன்புடன்வாழவந்து
மருமக்கள்பட்டுவுய்யும் மாதுயரதனைப்பார்மேற்
பெருமைசேர்தமிழினுலே பேசவம்மானையாக
மரைபுகழ்கரிமுகத்தோன் மலரடிவணங்குவோமே.

விநாயகர் தோத்திரம்.

வேண் செந்துறை.

ஆனைமுகப்பிள்ளையரே ஐங்கரரேமுன்னடவாய்
மோனமுதலான முகுத்தன்மருகோனே
சத்திக்கணபதியே சதுராகமுன்னடவாய்
அத்திமுகத்தோனே அரனுர்திருமகனே
கரிமுகப்பிள்ளையரே கணபதியேமுன்னடவாய்
பிரியமாய்மருமக்கள் படுகுத்துயர்பாட
அரியாச்சிறுவன்வாயில் அன்பாகவருவதற்கு
துரிதமுடனுகுவேறி துணையாக நீவருவாய்
குற்றங்கள்வாராமல் குறையொன்றும் நேராமல்
சித்தமுடனென்னுவில் சீராய்குடியிருந்து
ஆதிக்கணபதியே ஐயரேமுன்னடவாய்
சோதியாய்நின்றிலங்குஞ் சோதியுமைபுத்திரனே
பாடவேயெந்தனுக்கும் பகவானே யிப்பொழுது
கூடத்துணையிருந்து கொப்பெனவே முன்னடவாய்.

(சுப்பிரமணியர் துதி.)

ஆருமுகத்தோனே ஆயன்மருகோனே
கருத்துவைத்தெத்தனை நீ கார்த்தருளவேணுமையா
மாதுவள்ளிநாயகனே மயேஸ்பரியாள்புத்திரனே
நீதிலாமயிலேரும் திருத்தணிகைவேலவனே

மருமக்கள் துயரதனை மானிலத்திலேயோத
சிருவனுடனெனனுவில் செந்திலபதி நீயிருந்து
வேலவனேசிலவனே வெய்யவினைகளெல்லாங்
காலனனுகாமல் கர்த்தனே நீயுமின்றுக்
கூடக்குடியிருந்து குற்றங்கள்வாராமல்
பாடவேயெந்தனுக்கு பகவானே வந்துறையும்

(சரஸ்வதி துதி.)

தாயேசரஸ்வதியே சதுர்முகனுர்தேவியரே
தூயமருமக்கள் துயரஅம்மானைபாட
வெண்தாமரையதனில் விளங்கப்பிரந்தவளே
வண்ணமுடனிப்பொழுது வகையாக யென்னுவில்
சொந்தமுடன்பாடுதற்கு தோகையேயிப்பொழுது
வந்துகுடியிருப்பாய் வையம்புகழ்வல்லபையே
மலரில்பிரத்தொரு மாதாவேயுந்தன் திருக்
கமலபதங்களுக்குக் காளைசருணமம்மா.

கதையின் வரலாறு.

வெண்செந்துறை.

மருமக்கள் துயரதனை மானிலத்திற்சொல்லுகிறேன்
உருமையுடன்செவிகொடுத்து உத்தமரேகேட்டிடுங்கள்
இந்துதேசமென்னும் யெழிலானமின்னகரில்
விந்தையுடன்வாழுகின்ற யிந்துக்கள் நம்மவரும்
கண்ணுனமைந்தற்கெல்லோ காரிழையைத்தான்தேடி
வண்ணமணங்கள்செய்து வாழவந்தமருகளோ
மாமியும்நாத்தினியும் மச்சினிமாரானவரும்
பூமியிலவர்செய்யும் பொல்லாக்கொடுமையிது
கெட்டவழக்கமென்று கருத்தினிலெண்ணுமல்
மூட்டநினையாமல் முன்பின்னறியாமல்
நிலத்தில்நடந்துவரும் நாகரீகந்தெரியாமல்
கலியுகக்காலமென்று கருத்தினிலெண்ணுமல்
முன்னவர்கள்செய்துவந்த முக்காலபழக்கமது
இன்னமவரைவிட்டு ஏகாமலிப்பொழுதும்
செல்வர்கள்வீடாயினும் சிறுமையோர்வீடாயினும்
புல்லவேசொல்லுவேன்கேள் புதிதாகத்தான்வருஞ்

மருகிகள்தான்படிகும்மருங்கொடுமைபெத்தவுண்டு
மருகியெனவீட்டிற்கு மாதொருத்திவந்துவிட்டாள்
அவளேயவ்வீட்டிற்கு யடிமைவேலபுரியும்
பவமேபுழுக்கச்சிப்போற் பார்க்கமதிப்பாகும்
சின்னவயதுள்ள சீரார்மருகிகட்கும்
உண்ணும்நற்புத்திகளும் ஒடுக்கம்பழக்கங்களும்
குடித்தனஞ்செய்யுமொரு கூர்மைமுறைமைகளும்
நடத்திவருவதுவே நற்பழக்கம்மாமிகட்கு
கற்றுக்கொடுப்பதுவே காரியமானதுவாம்
சுற்றவிசாரணையும் செய்துவருதல்தன்ரும்
அப்படிக்கில்லாம லிக்காலமாமிமார்கள்
செப்பொணகொடுமையது செய்வதுதருமமோதான்

கமலம்பாள் துயரம்.

ஏந்திழையேதங்கையரே யென்துயரைக்கேளுமம்மா
வாழவந்தயென்குறையை வஞ்சியரேசொல்லுவேன்கே
தாலியதுகட்டிகொண்டு தையலரேயானுமல்லோ [ள்
மாமியார்வீட்டுக்கு மாதுநான்வந்தகாளாய்
தான்படுங்கஷ்டங்களே தவிலவுமாருமோதான்
கடவுளொருவரல்லோ கண்டறிவாரெந்தன்கஷ்டம்
மற்றவரறிவாரே மாதுயெந்தன்குறையை

வேணுமென்றுயேண்ணியேநான்வெகுபாடுபட்டாலும்
எத்தனிடமாமியாற்கு யேற்கையதுஒன்றுமில்லை
சொட்டுகள்சொல்லாமல் சும்மாய்விடுவதில்லை
ஏதேனுமோர்குற்ற மென்மீதில்சொல்லிடுவாள்
இப்படிக்குமாமியவள் யென்னைவதைப்பதுடன்
ஏழரைநாட்டுசனி யெண்ணமிட்டுவந்தாற்போல்
வாழைகெடுக்கவந்த வலகைபோலெந்தனுக்கு
போதாகுறைக்குவொரு பொன்னியம்மன்குறைபோல்
எனக்கொருநாத்தியவ ளிருந்தல்லோதங்கையரே
படுத்துமிமிசைகளைப் பகரக்கணக்குமில்லை
செய்யுமிமிசைகளைச் சொல்லமுடியாது
அந்தபுண்ணியவதி அதிகாரம்சொல்லுவேன்கேள்
நல்லதோர்சேலைதன்னை நானுடுத்தலாகாது
எண்ணெயிட்டுத்தலைவாரி யான்முடிக்கக்கூடாது
பூமுடிக்கலாகாது பொட்டுவைக்கப்போகாது
உள்ளநகைகளையும் உடலில்தரிக்கொணாது
பார்த்தால்பொருக்காளே பழிகாரிநாத்தியவள்
கண்டால்பொருக்காளே காதகிநாத்தியவள்
இத்துடன்போச்சுதென்று யெண்ணுதேதங்கையரே
கணவனுடனேநான் கடிகைநேரமாகினும்
ஆறியமர்ந்தலவோ ஆசைபாசங்களோடு
பேசவுமெந்தனுக்குப் பாவையரேநேரமுண்டோ
என்னநான்செய்வனம்மா எந்தன்தலைவிதிக்கு
விடியகாலமெழுந்து விட்டிலுள்ளவேலைகளை
செய்துமுடிக்கவேண்டும் சித்தப்படுத்தவேண்டும்
சமையல்கள்செய்யவேண்டுஞ் சகலமமைக்கவேண்டும்
வென்னீருவைக்கவேண்டுந் தண்ணீர்விளாவவேண்டும்
புருஷனுக்கன்னமிட்டு பணிவிடைகள்செய்யவேண்டும்
பாலரையுங்கார்க்கவேண்டும் பாலுங்கொடுக்கவேண்டும்
இவ்வளவுவேலைகளை யேந்திழையேசெய்துவிட்டு
என்வருத்தம்பாராமல் யேகியேயகூணமே
தண்ணியமாமியோடு நாத்தியரம்மாளை
வேண்டிவேண்டிஒருஜாமம் வருந்தியேதானழைத்து
அன்னமிடுவதற்குள் அன்புள்ளதங்கையேகேள்
என்னுடையப்பாட்டை யேதென்றுயானுறைப்பேன்
மூன்றுங்கட்டுக்கெல்லோ மொய்க்குழலேவந்துவிடும்
சாப்பிட்டுமாமிநாத்தி சதுராகப்போனபின்பு

அதன்பிறகுயானுமல்லோ அன்னமுந்தான்புசித்து
மற்றுமுள்ளவேலைகளை மறவாமல்செய்வதற்குள்
ஏத்திழையேநல்லபகல் இரண்டுமணியாகும்
சாற்றவேநல்லபகல் சாமமுமூன்றாகும் [லோ

அதற்குமேல்கொஞ்சம்நேரம் அரிவையரேயானுமல்
புத்தகத்தைத்தானெடுத்துப் படிக்கலாமென்றாலோ
கண்டெல்லோமாமியாரும் காய்ந்தவளுமோர்பக்கம்
என்னடிபுத்தகத்தை யெடுத்துநீயென்னேரம்
கட்டியழுகுராயே காரணமென்னடியோ
புருஷனுக்குச்சம்பாதித்துப் போடப்படிக்குறாயோ
அல்லதுநீபடிப்பு யாற்குப்படிக்குராயோ
கள்ளபுருஷனுக்கு கடிதங்கள்தானெழுதி
உள்ளுக்குள்ரகசியங்கள் வோதப்படிக்குராயோ
எழுதிவரவழைக்க யெண்ணம்வைத்துபடிக்குராயோ
மூன்றுபடிப்புமெல்லோ முசியாமல்தான்படித்து
பாசுகள்செய்தெலோ பார்க்கவேபேருபெற்ற
மூண்டங்கள்வீட்டிலே முறண்டெல்லோதூங்குவதை
கண்டுவரியாயோ காணவேவையகத்தில்
அடுப்பூதியுந்தனுக்குப் படிப்பில்லாவிட்டாலிப்போ
முழுகியேபோய்விடுமோ மூதேவியுந்தனுக்கு
படிப்பாசெருப்பாவென்று பலவாராய்தான்பேசி
தாருமாராகப்பேசி தான்வைவதல்லாமல்
நாத்தினியானவளும் கூத்தனைப்போல்நின்று
குசுகுசென்றுமந்திரங்கள் கூசாமல்தானோதை
இல்லாதும்பொல்லாது மெடுத்துமிகக்கூற
மகளுடையபேச்சையல்லோ மாமியார்தான்கேட்டு
அவள்பேச்சும்பேச்சுகளோ யாரணங்கென்னசொல்வேன்
நாக்கழுவப்பேசிடுவாள் நட்சத்திரமிற்றுவிழ
வாயில்வந்தபடியாய் வம்புந்தும்புமாகவைவாள்
கேளடித்தங்கையரே வாழவந்தயென்கொடுமை
இங்கேதானிப்படி யிருக்குதேயென்றெண்ணி
என்னுடன்தான்படித்த பெதிர்வீட்டுசுந்திரமிடம்
போய்பேசியிருந்தாகிலும் பொழுதைகழிப்பமென்றால்
அங்கையும்வந்துயிந்த அரும்பாவிமாமிசொல்வாள்
அவிழ்த்துவிட்டகழுதையைப்போல் அடியாசிரிக்கிதி
ஊரூராய்சுற்றுதற்கு ஓடுறுயென்னவென்றும் [வம்

இப்படிக்குமங்குவந்து யெழவுகொடுப்பதிலே
பேசாமல்வீட்டிலேயே குந்திருப்பமென்றூலோ
எந்தனுக்கோமனது மிடமுங்கொடுக்கவில்லே
அல்லதுஅப்படியே யிருந்துத்துலைத்தாலும்
அதற்குமனம்பொறுமல் அம்மாமிசொல்வதைக்கேள்
குட்டிச்சுவர்போலே குந்திகொண்டிருக்கிறூயே
இடிச்சுவர்போலாக யிருக்குறூயென்னடி நீ
ஏதாவதுவேலே செய்யப்போகாதோவென்பாள்
இந்ததொணப்புக்குதான் யென்னதான்செய்வதென்று
அடுப்பாகிலுமூட்டி அன்புள்ளதங்கையேகேள்
இராச்சமையலாகிலுஞ் செய்வமென்றுபோறூலோ
அப்போதுயென்மாமி அதட்டியேயேதுரைப்பாள்
என்னடியிப்பொழுது யிராத்திரிசமையலுக்கு
பத்துமணிசாப்பாட்டிற்கு யித்தனைதூரதமென்ன
வேலையத்தவளேபோய் வேரவேலைபாறுமென்பாள்
இத்தோடொழிந்ததென்று யெண்ணதேயென்துயரம்
சமையல்முதலானதெல்லாம் சட்டமாய்செய்தபின்பு
உடம்புகசகசென்று வூருதுவேர்வையென்று
குளித்துத்தலைவாறிக் கொண்டையுந்தான்போட்டு
பொட்டிட்டுநல்லதொருப் புடவையுடித்திறூலும்
கண்டாலேமாமியாரும் கண்பிதுங்கியேதுரைப்பாள்
தாசிபோல்சிங்காரித்து தளுக்குங்குலுக்குங்காட்டி
* ஓடக்கால்தெருபோக உத்தேசங்கொள்ளுறூயோ
கள்ளமாப்பிள்ளேதேட கருத்தினிலெண்ணுறூயோ
என்றெல்லோமனமுருக யெடுத்தவளும்பேசுகிறூள்
இவ்விதிக்கென்னசெய்வேன் யேந்திழையேதங்கையரே
குளிக்காதிருக்கலா மென்றூலோகேளடியே
உடம்புசகிக்கவில்லே யொருஞளிபொருப்பதற்கு
சகிக்கலாமென்றெலவோ சாதித்திருந்தாலும்
இரவினில்யெஜமான்வத்து என்னையுந்தான்பார்த்து
அடிபெண்ணேயென்றவரு மதட்டியேயேதுகேழ்ப்பார்

---

* சென்னையில் ஓடக்கால்தெரு என்பது ஒன்றுண்டு இது ஒய்டு யுகால் என்றிருந்து ஓடக்கால் எனக்காலக்கிரமத்தில் மருவியது இங்கு வீலைமாதர் அதிகம் சிலகாலத்துக்குமுன் அத்தெருவிற்செல்லும் ஆட்வர் மீண்டுந்திரும்புவது கஷ்டமெனப் பிரசித்தமானபேச்சு.

குளிக்கக்கூட வுனக்கு கொஞ்சம்நேரமில்லையோ
சுத்தமாயுந்தனுக்குச் சுரணையுந்தானில்லையோ
பரச்சியிகிலுங்கொஞ்சம் பார்க்கசுத்தமாயிருப்பாள்
பரச்சியிலுங்கெடுகெட்ட பரச்சியைப்போலானையே
தண்ணீர்கிடையாதா தான்கிணரும்பாழாச்சா
உனக்குவந்தகேடுகாலம் யென்னடிமூதேவி
உன்னைவாழ்வதற்கு கழுதையைக்கட்டியுமே
வாழலாமென்றவரும் வாயில்வந்தப்படிக்கு
சொல்லாதுஞ்சொல்லுகிறார் ஜென்மம்பதருதம்மா
எந்தவழியான்போவேன் ஏந்திழையேதங்கையரே
எரவேசொன்னலும் எருதுக்குக்கோபமென்றும்
இரங்கவேசொன்னலும் மொண்டிக்குகோபமென்றும்
கூறுமொழிபோலே குமிங்கினன்தங்கையரே
இருதலைக்கொள்ளியென்னு எரும்புபோலிருக்குரேனன்
நின்றுதவிக்குறேதான் நீலியொன்றுமில்லாமல்
மாமிநாத்திகள்செய்யு மாகாகொடுமைகளும்
காலையிலேநடக்கும் கஷ்டநிஷ்டரேங்களும்
இந்தசங்கதியெல்லாம் யெடுத்தெல்லோதங்கையரே
புருஷனிடம்சொல்வோமென்று பார்த்தாலோதங்கைய
அப்போதென்னவொரு அனர்த்தம்வருமேயென்று[ரே
எண்ணுதுமெண்ணுகுது யென்செய்துதுலைப்பதென்று
யோசிக்கயோசிக்க என்மனம்பதைக்குறது
எத்தனைநாளைக்குத்தான் யிந்தவிதக்கஷ்டங்களை
பட்டுத்துலைப்பதுநான் பகருமம்மாதங்கையரே
என்றல்லோகமலாம்பாள் யெடுத்துமிகக்கூற
தங்கையந்தக்காந்திமதி தான்கேட்டுவப்பொழுது
கமலம்மாளேநோக்கி காந்திமதியேதுரைப்பாள்
உன்னுடையபுருஷன்வீட்டில் உத்தமி நீபடுங்கஷ்டம்
செவியாரக்கேட்டலவோ சிந்தைநொந்துமனம்வாடி
என்னிருகண்ணீரும் ஆறுப்பெருகிறது
என்னநாம்செய்வதுதான் யேந்திழையேநம்மதாட்டில்
வீட்டுக்குவீடெலவோ யிப்படிதானிருக்கிறது
என்னுடையதுயரத்தை யேந்திழையேகேட்டேயானல்
உனக்குமேலென்மணங்கு உத்தமியேதானிருக்கும்
ஆகினுமென்குறையை அக்காளன்சொல்லிவாறேன்
கலங்காமனமுடனே கவனமுடன்கேட்டிடுவாய்
சுருக்கமுடன்சொல்லிவாறேன் சுந்தரியேகேட்டிடுவாய்

காந்திமதிதன் துயரத்தை கமலம்பாளிடஞ் சொல்லல்.

என்றெல்லோகாந்திமதி யெழிலாகவப்பொழுது
கமலம்பாள்முகம்பார்த்து காந்திமதியேதுரைப்பாள்
நீகேளுமப்பியரே நீலக்கவேயுந்தனுக்கு
ஒருமாமியொருநாத்தி யோடுபோராடுகிராய்
என்குறையைச்சொல்லுகுறே னிதைகேளுமப்பியரே
மாமிமார்மூன்றுபேரு நாத்தினிமார்தான்குபேறு
ஓரகத்தியெந்தனுக்கு வுண்டக்காலந்துபேறு
இத்தனேபேர்மத்தியிலே யிளைத்தவள்நானொருத்தி
ஊருக்கிளைத்தவன் பிள்ளாக்கோயிலாண்டி
இளைத்தவன்பெண்டெலவோ யெல்லோர்க்குமச்சினச்சி
என்றமொழிக்கொப்பா யிருந்தெல்லோநானொருத்தி
பட்டவெரும்பாடுகளைப் பகரவுமாகுமோதான்
நானொருபெண்பிள்ளையாய் நாயங்கள்சொல்லவந்தேன்
எங்கையோயென்மனது யேத்திழையேபோகுறது
நம்முடையமாமிகட்கோ நாயகமேசொல்குறேன்கேள்
படிப்பென்றபேர்வழியோ பகரவேபூஜ்ஜியத்தான்
எழுத்தின்வாசனைகளே யேதுமறியார்கள்
மருகிளைவைத்துகார்க்க மாமிகளும்வகையறியார்
பாதங்கள்தான்தேய பத்துதரம்நடந்து

கண்ணன்மைந்தனுக்கு கன்னிகையைதாருமென்றும்
வண்ணமொழியுறைத்து வாகாகத்தான்பேசி
கண்ணேநிமையதுவுங்காற்பதுபோல்காற்பேனென்றும்
யென்மகளுக்குமேலாய் பெழிலாகக்காற்பேனென்றும்
பெண்ணைகொள்ளுமவரைக்கும் பேசிநயமாக
எண்ணம்வேராகவைத்து யிருந்தெல்லோமாமிர்கள்
தாலிகட்டிமுடிந்தவுடன் தான்கேளுமப்பியரே
அவர்வீட்டுவேலைசெய்யும் அடிமையைபோல்பாற்பார்
அதற்கேற்றப்படியாக அப்பியரே,நாமுமேதான் [கள்
முழுதுமறியாத மூடர்களாயிருப்போமானால்
அத்தைநாத்தினிசொல்லும் அகடானவார்த்தைகட்கு
எதிராய்ஜவாப்புமல்லோ மியம்பலாஞ்சரிசரியாய்
அல்லாருசொல்ல நமக்காகலேயே அப்பியரே
எதிர்நின்றுபேசமன மில்லையேயென்செய்வது
அக்கையரேயின்னமொரு அனியாயஞ்சொல்லுவேன்
என்னுடையதந்தையருமெழிலாகயெந்தனுக்கு[கேள்
படிப்பிக்கயென்னையுமே பள்ளிக்கனும்பும்போது
கண்டெல்லோயென்பாட்டி கிழவியுமேயே துரைப்பாள்
பிள்ளையைத்தானழைத்து பேசாதெல்லாம்பேசி
பெண்ணைகெடுக்கவையோ பார்க்குராயென்னடா நீ
படுபாவியென்றெலவோ பாட்டியவள்தான்பேச
என்தந்தையவள்மொழியை எள்ளளவுங்கேளாமல்
என்னைபள்ளியில்வைத்து எனக்குமேயிவ்வளவு
அறிவைவிசாலித்து அன்பாகத்தானும்வைத்தார்
அவருடையப்புண்ணியமே அக்கயரேயெந்தனுக்கு
கல்வியழகெலது வேரழகுவொன்றுமில்லை
அறிந்தவரறிவார்கள் அருங்கல்வித்தன்னழகை
தெரிந்தவர்கள்தேருவார்கள் திகழானகல்வியினால்
ஆகினுமிப்பொழுது அப்பியறேசொல்லுவேன்கேள்
நம்முடையமாமியோடு நாத்தினியானவரும்
இவ்வாறுநம்மோடு யென்னேறம்வாதுமிட்டும்
கொடுமைகள்புரிகுவதும் குமிங்கிநாமழுகுவதும்
வருந்தமும்நாமடைந்து வாடிமிகவிருக்க
அதைகண்டநம்முடைய ஆளனாவர்தமக்கு
நம்முடமீதினிலே நாட்டங்களில்லாமல்
இஷ்டங்களில்லாமல் யேகிப்பிறர்மனைக்கு
இச்சித்துச்செல்லுவதும் யெல்லாமேயாகிறது

என்னு தாம்செய்வ தென் னுடைய அப்பியரே
நம்முடையகருமமென்று நாமெண்ணிக்கொண்டாலும்
முன்னுள்வினையென்று மொய்க்குழலேயிருந்தாலும்
இப்போ நமக்கெலவோ யெழிலாய்கிடைத்திருக்கும்
அரசாங்கத்தார்கள்வெகு யான நல்லோர்களென்றும்
உலகமுழுதிலுமே யோதுகுரார் அப்பியரே
பிறர்துக்கம்பார்த்தவர்கள் பொருக்காத நல்லவராம்
ஆதலால்அக்கையரே யாங்காங்குஉள்ளதொரு
கல்வியில்தேர்ந்ததொரு கண்மணியாம்பெண்களெல்லா
தங்கள்தங்களுக்குள்ள தக்கதோர்நாயமான [ம்
குறைகளையல்லாம்நாம் கொண்டுமேதன்றுக
அப்போதுக்கப்போது அரசாங்கத்தார்க்குமுன்னே
கொண்டுவருவோமானால் கூறக்கேளப்பியரே
காருணியமுள்ளதொரு கவனர்மெண்டார்களுமே[லோ
கொஞ்சத்திற்குகொஞ்சமேனும் கோதையரே நாமுமல்
சுகப்படயேதுவாக செய்வாரென்றெண்ணுகுறேன்
எனறெல்லோகாந்திமதி யியம்பிமுடித்தாளே.

பத்மாவதியின் துயரம்.

பத்மாவதியென்னும் பங்கிளியால்தானுமல்லோ
ஆசைசகோதரியை யன்பாகத்தானழைத்தும்
தன்னுடையத்துயரமதை தையலருங்கூறலுற்றாள்
கேளாய்சகோதரியே கன்னியுடனென்துயரை

கவனமாய்க்கேட்டிடுவாய் காதுகொடுத்துமிப்போ
சீராகக்கேட்டிடுவாய் செவிகள்கொடுத்துமிப்போ
விடியுமுன்னெழுந்திருந்து விளம்பக்கேள்சகோதரியே
வீடுமுழுதுமல்லோ விரைவாய்பெருக்கவேணும்
கொப்பெனவேமெழுகி கோலமிட்டாகவேணும்
பாத்திரங்கள்முழுதும் பார்த்துத்துலக்கவேணும்
மாட்டுசாணியைவாறி மலைபோலேகொட்டவேணும்
அவைகளைபிசைந்துருட்டி எருத்தட்டியாகவேணும்
இவ்வளவுவேலைகளை யாரொருத்திசெய்கவேணும்
பால்கள்கறக்கவேண்டும் பதமாகக்காச்சவேணும்
மோர்கள்கடையவேண்டும் மொத்தைவெண்ணையாவே
தெல்லைவேவித்துலர்த்தி தன்னருகுத்தவேணும் [ணும்
தண்ணீர்வேண்டுமளவும் தான்கொண்டுசேர்க்கவே ணு
இப்பெருங்குடும்பத்திற்கு தானேசமைக்கவேணும் [ம்
இத்தோடுநில்லாது இன்னங்கேள்சகோதரியே
மாமன்மாமிபுருஷன் மச்சினர்முதலோர்க்கும்
தண்ணீருங்கொண்டுவந்து தையலரேநாளொருத்தி
குளிக்கவேவென்னீருங் கொப்பனவேவைக்கவேணும்
மாமிநாத்திப்புடவையோடுமங்கையரேயின்னமுங்கேள்
மாமன்புருஷனோடு மற்றுமுள்ளோர்வேட்டிகளை
கட்டியேமூட்டையாகக் கணத்தருகேகொண்டுசென்று
தய்யவேயவைகளையும் தோய்த்துவரவேணும்
இப்படிக்கெல்லாம்நான் யெல்லாவேலையுஞ்செய்து
அலுத்தவருத்தத்தோடு அசைந்துசற்றும்நில்லாமல்
செய்துமேவந்தாலும் சொல்வதுகேள்சகோதரியே
கட்டினவீட்டிற்குக் கல்வியதுசொல்வதுபோல்
அதுசொத்தைசொள்ளையென்று யதட்டியேமாமிவந்து
பேச்சுகுறபேச்சுக்குப் பதில்களுஞ்சொல்லவேணும்
மடிபிடித்துமிழுக்கவரும் மாமியோடுநாத்தியுடன்
சண்டைக்குநிற்போருடன் சண்டைக்குநிற்கவேண்டும்
என்னதான்செய்தாலு மியம்பக்கேள்சகோதரியே
என்னசெய்தாளென்று என்மேல்சண்டைக்குநிற்பாள்
போதாகுறைச்சலுக்குப் புகலக்கேள்சகோதரியே
புருஷனிடமுஞ்சொல்லிப் பூசைவாங்கித்தருவாள்
மாமனார்மச்சினமார் மற்றுமுண்டானவரும்
வாயில்வந்தபடியாய் வைவார்களென்னையுமே
சரிவரதாஷனித்துச் சண்டைக்கும்நிற்பதுண்டு

இப்படிக்கெல்லாபாடு மிருந்துழைப்பவட்கும்
வயிறுரவுண்ணவுந்தான் வாகாயுடுத்தவுந்தான்
கிடைப்பதுமில்லையோடி கேளுஞ்சகோதரியே
நானுமேசாப்பிடவும் நங்கையரேவந்தாக்கால்
மாமியார்சாதம்போட மாவிரவாய்வந்திடுவாள்
அறைவயற்குமேல்போட அவட்குமனம்வாராது
நல்லதோர்சேலைதன்னை நான்கட்டபாற்கமாட்டாள்
தலையிலெண்ணைதடவ தானுப்பொருக்கமாட்டாள்
தலைவாரிகொண்டையிலே தான்புஷ்பஞ்சூடவிடாள்
நகைகளைபோடவிடாள் நானயங்கள்செய்யவிடாள்
இவளுடையபொறுமைக்கு யியம்பக்கேள் சகோதரியே
மாமியாரைக்காணுமல் மறைவாகயாவதுதான்
எண்ணெய்தடவிதலை சீவவேகண்டுவிட்டால்
என்னடி நீயென்ன தேவடியாளோசொல்
மேனியெல்லாமிப்போ மினுக்குகள் பண்ணுறியே
என்றுமேவைதுகொண்டு யென்குடல்தடுங்கும்படி
காலினப்போல்கடுகடுத்து கருவியோடிவருவாள்
இதுமாத்திரமென்று யெண்ணுதே சகோதரியே
சார்ந்துநான்புருஷனோடு சந்தோஷமாய்பேசகண்டால்
அவளுக்குமேமன துயாறச்சகியாது
என்புருஷன்யென்மீதில் யிருக்கபட்சமாகக்கண்டால்
அப்போதவள்சொல்லும் அகடுகேள்சகோதரியே
தேவடியாள்முண்டையிவள் திருட்டுக்கள்ளி என்னமோ
மாப்பிளைக்குமருந்திட்டு மயக்கிவிட்டாளென்றுசொல்லி
சண்டைக்குத்துடங்குவாள் சதிகாரியென்மாமி
இன்னமுமப்பாவி யியம்பக்கேள்சகோதரியே
இல்லாதும்பொல்லாது மென்மீதுகோள்கள்சொல்லி
அபராதமேற்றியல்லோ அஞ்சாமல்பாதகியும்
புருஷனையுமெந்தனுக்குப் பகையாக்கிவைத்திடுவாள்
இப்படிக்காகவல்லோ யென்மாமிவீட்டிலேதான்
படாதபாடுகள்தான் பட்டுவருகின்றேனே
என்றெல்லோபத்மாவதி யெடுத்துமிக்கூற
கேட்டுமரகதவல்லிக் கன்னிதுயரமுற்று
பத்மாவதியைநோக்கி பாவையருமப்பொழுது
தன்னுடையதுயரதனை தான்கேளுமக்காவென்று
வண்ணமுடன்வாய்திறந்து வாகாயுறைக்கலுற்றாள்.

மயிலாப்பூர் மரகதவல்லியின் துயரத்தை பத்மாவதியுடன் சொல்லல்.

அன்புள்ள அக்காயென் அருந்துயரை நீகேளும்
என் னுடையகுறையதனை யுன்னிடத்திற்சொல்லாமல்
பின்னே நான்யாரிடத்திற் புகலுவேன் தங்கையரே
நல்ல நகரத்தில் நாயகமேநான்பிறந்து
நாட்டுப்புறத்திலென்னை கட்டிக்கொடுத்தபின்பு
பட்டிகாடுதன்னிலே பாவி நான்வாழவந்து
நான்படுங்கஷ்டங்களை நவிலமுடியாது
சொல்லிமுடியாது சகிக்கவும்போகாது
எழுதிமுடியாது ஏட்டிலடங்காது
என் னுடையகஷ்டங்களை யாரரிவார்வையகத்தில்
தெய்வமறியுமல்லால் தேசத்திலாரறிவார்
வெடியநாலுமணிக்கு விழித்துநானெழுந்திருந்து
அத்தையிருட்டிலேயே யக்கா நான்சொல்லகேளும் [து
மாட்டுகொட்ட கைக்குச்சென்று சாணமுங்கொண்டுவந்
தெருமுதல்வீடுவரை சுத்திகள்செய்வதற்குள்
பொழுதுவிடிந்துவிடும் பொற்கதிரோ னுதையமாவான்
கங்குல்விடிந்துவிடும் கதிரோ னுதையமாவான்
அதின்பிறகுகேளுமக்கா அறிவையென்வேலைகளை
வீட்டினிலுள்ளதொரு வேணதோர்பாத்திரத்தை

சுத்தப்படுத்தவேண்டும் சாமான் துலக்கவேண்டும்
வீட்டிலுள்ளவேலையாவும் வடிவாய்முடிவதற்குள்
நல்லமணிஒன்பது நாயகியேயாகிவிடும்
அதற்குமேல்கேளுமம்மா அக்கையரேயெனக்கஷ்டம்
கழனிக்குப்போயிருக்கும் கணவர்க்குக்கேளுமம்மா
கஞ்சி தான்கொண்டுமல்லோ கடுகனவேபோகவேணும்
அதோடுவிட்டுதோதான் அக்காயென்தலையின்விதி
கணவனுடனேதான் கலைகள்பரிக்கவேண்டும்
நாற்றுப்பிடுங்கவேண்டும் நட்டுத்துலக்கவேண்டும்
அதற்குள்ளேதல்லமணி யாகும்பனிரண்டும்
அதற்குப்பின்வீட்டைவந்து அக்காநீகேளுமம்மா
கஞ்சிக்குடித்துவிட்டு கடுகெனவேகேளுமக்கா
வேண்டியகேழ்வரகை விரைவிலறைக்கவேண்டும்
அறைத்தவுடனேயு மக்காவே நீகேளும்
சாப்பாட்டுக்கானதெல்லை சடுதியிலேதானெடுத்து
கொய்யலறவுமல்லோ குத்திகொழிக்கவேண்டும்
தாத்திப்புடைத்துமதை தான்முடிவுசெய்வதற்குள்
என்னுடையஜீவனது யெமலோகம்யெட்டிடுமே
அன்னேரவேளைக்கெல்லோ ஐந்துமணியாகிவிடும் [ன்
அதற்குமேல்சமையல்வேலை ஆறம்பித்துகொள்வதுட
காட்டுக்குப்போயிருக்குங் கணவரோடுமைத்துனர்க்கும்
குளிக்கவென்னீர்வைத்து கொப்பெனவேதருகவேணும்
நாட்டுப்புரத்திலென்ன நாயகியேகுழாவுமுண்டோ
கிணத்திலேசேந்தியல்லோ கன்னியேதூக்கவேண்டும்
என்சொல்வேனக்காவே இத்தண்ணீர்சேந்தும்போது
கையிரண்டுமிற்றெலவோ கபகபென்றுதானெரியும்
கஷ்டத்தையாரரிவார் கடவுளறியவேண்டும்
தண்ணீரைமொண்டுவிட்டு தானலுத்துவருவதற்குள்
வண்ணனுடன்பண்ணைக்காரன் வந்துவிடுவார்கள்
அவர்களுக்குத்தகுந்தபடி அன்னமிடவேண்டும்
மாமனார்மாமியற்கும் மைத்துனர்க்கும்நாத்திகட்கும்
இன்னமுள்ளப்பேர்களுக்கும் அன்னமிடவேண்டும்
சாப்பிடும்வரையவற்கு சார்பாராய்செய்யவேண்டும்
வீட்டுவிவகாரம் ஒழித்தெல்லோதான்முடிய
இரவுமணியதுவும் யெட்டுமேதாகும்
அதற்குமேலக்கையரே யானுஞ்சாப்பிட்டுவிட்டு
அப்பவேமறுபடியும் அன்னேரவேளையிலே

சமைத்ததேர்பாண்டமதை சகலமுந்தானெடுத்து
ஓரண்டையிருத்தெலவோ சுத்திகள் செய்யவேண்டும்
இப்படிக்காகவல்லோ யென்துயரங்கேளுமக்கா
காலையிலெழுந்திருந்து காணயிறவுமல்லோ
பத்துமணிவரையில் பகரவேகேளுமக்கா
மாட்டைப்போலுழைத்தாலும் மாமிநாத்திகளண்டை
நாயகமேயெந்தனுக்கு நல்லபேர்கிடையாது
இவ்வளவுதானேயக்கா இன்னங்கேளென்கெதியை
என்கெதியைச்சொன்னால் ஏட்டிலடங்குமோதான்
பொழுதுவிடியுமக்கா பொற்கோழிகூவுமம்மா
கங்குல்விடியுமக்கா கதிரோன்மேற்காகுமம்மா
பிறர்கேட்டால்நகைப்பாரே பெண்ணின் கொடுமைதானே
அக்கம்பக்கங்கேட்டா லையோசிரிப்பாறே
வேலையின்கஷ்டமக்கா யிருந்தாலொருபுறமும்
மாமியும்நாத்தியாலே நான்படுந்துன்பங்களே
சொல்லிமுடியாதுச் சுருக்கவுமாகாது
ஆகினும்சூட்சமாக அதைசொல்லிமுடிப்பேநக்கா
சித்தமுடன்செவிகொடுத்து சற்றேநீகேளுமக்கா
எனக்கிருக்குஞ்சத்ராதி என்னுடையமாமியோதான்
நல்லத்துணிகளுமே நானுடுத்தப்பார்க்கமாட்டாள்
ஒருவேலைசெய்யும்போதே யின்னொருவேலையிடுவாள்
செய்யவில்லையென்றெலவோ சீரியவளே துரைப்பாள்
தடிசிறுக்கியென்றும் தட்டுவாணிசிறுக்கியென்றும்
வாயில்வந்தபடியாய் வைவதுந்தான்தவிர
நாத்தினியானதொரு கூத்தனும்பாவியவள்
என்மீதில்தானுமல்லோ யேதேனுங்கோளெடுத்து
ஆத்தாளிடத்தினிலே யவளுமேகுத்திவிட்டால்
அதைகேட்டுயென்மாமி அரும்பாவியோடிவந்து
திடீர்திடீரென்று தானதிரவோடிவந்து
மயிரைப்பிடித்திழுத்து மாபாவிகீழேபோட்டு
கையிலகப்பட்டதைக் காதகித்தானெடுத்து
கண்டபடிக்குயென்னை யடிப்பதுமல்லாமல்
ஆகட்டுத்தேவடியாள் உன்மாப்பிள்ளைதான்வரட்டும்
உன்னுடையமதத்தை அடக்கச்சொல்குரேனென்று
சபதங்கள்செய்துயென்மேல் சதிகாரிமாமியவள்
பிள்ளைவந்தவுடனே பெரும்பூதம்போலெழுந்து
அதட்டியடையாநீ வாடாவென்றேயழைத்து

கொடுஞ்சூலிமாழியவள் கூறுவதைகேளுமக்கா
என்னடாவுன்பெண்டுக்கு யேருதுபேச்சுமிப்போ
மொட்டைச்சிரிக்குக்கு நீமுகங்கொடுத்திருப்பதினல்
அவளுக்குத்திமிருகொண்டு அடங்காதமதமேறி
குடித்தினத்தைப்பாழாக்கி கொண்டெல்லோ தானும்வா
ழுறவுழுகிறவன் யிளைத்தேயிருப்பானுகில் [ருள்
எறுதுமச்சினங்கொள்ளு மென்றுவுரைப்பதுபோல்
உன்னுடையபெண்டாட்டி யுன்னுறுதியாலல்லவோ
அந்தச்சிறுக்கியென்னை யணுவுமதியாமல்
ஏடாகுடமாக யெடுத்தெரிந்துபேசுகுரூள்
என்றுப்பலவிதமா யியம்பிப்புலம்பிடுவாள்
அதைகேட்டுஅந்தபாவி ஆக்கிரமித்துவோடிவந்து
நியாயமனியாய மொன்றையுங்கேளாமல்
தாத்துக்கோல்தனையெடுத்து துரத்தியேனையடிப்பார்
தாத்துக்கோலடியக்கா தாங்கமுடியாமல்
தாய்வீடுவந்தெலவோ தான்சேர்ந்தேனிப்பொழுது
பூமியில்பெண்ணுப்தான் பிறந்ததும்போதும்போதும்
என்றுமரகதவல்லி எடுத்துரைத்தாள் தன்குறையை

(உக) கதைகளடங்கிய

கலியுகவிஞ்ஞானகதை.

இதிலடங்கிய கதைகளானது இதுவரையிலும் யாவராலும் அச்சிடாதும் யாவரும் கேட்டிராததுமான அதிகவிஞ்ஞானமாகியகதைகள்.

1. வது, சாஸ்திரத்தைநம்பி ஜெயமடைந்தவன்கதை. 2. வது, விவேகமற்ற வீரகோபாலன்கதை. 3. வது, ஸ்ரீதேவிக்கும் மூதேவிக்கும் வழக்குண்டானகதை. 4. வது, கொண்டவனைக்கொல்லநினைத்தகுண்டோதரிக்கதை. 5. வது, வர்த்தகக்குமாரன் வேசியால்கெட்டகதை. 6. வது, வெளிமுண்டாகொடுக்குக்கதை. 7. வது, புகையிலையின்மகுத்துவக்கதை. 8. வது, சோதிடவல்லவன்கதை. 9. வது, பிராமணப்பெண்கதை. 10. வது, வயித்தியன்கதை. 11. வது, சுயம்பாகிக்கதை. 12. வது, சந்தியாவந்தனக்கதை. 13. வது, ஈயாபத்தன்கதை. 14. வது, மூக்கரையன்கதை. 15. வது, ஆயிரம்பஞ்சுவன்கதை. 16. வது, அரக்கமாட்டவன்சூத்தில் அன்பத்தெட்டறுவா லென்றகதை. 17. வது, பெண்பார்க்கும்நாதன்கதை. 18. வது, பிராமணன் பூனையாகப்பிறந்தகதை. 19. வது, கெட்டகுமாரன்கதை. 20. வது, மதிகெட்டான்கதை. 21. வது, வைராக்கியராஜகுமாரன்கதை. இவைகள் அடங்கியது;

புஸ்தகம் 1-க்கு விலை அணு-8. இப்படிக்கு.

☞ பூ. சு. கோவிந்துராஜ முதலியார்.

சூளை போஸ்ட் மதராஸ்.

சென்னமீனுள் தன் துயரத்தைத் தன் தோழியுடன் சொல்லல்.

இஷ்டப்பிரியமுள்ள யெழிலானத்தோழியரே
என்னுடத்துயரமதை யியம்புவேன்கேட்டிடுவாய்
பட்டனத்தில்தான்பிறந்து பட்டிகாட்டில்வாக்குபட்
வாழ்க்கைபட்டபிற்பாடு வஞ்சியரே நீகேளு [டேன்
நான்படுந்துயரமதை நானிலத்திலாரறிவார்
ஆண்டவன்தானலவோ அறியவேண்டுமென்துயரை
மற்றவரறிவாரோ மங்கையரேயென்தோழி
என்க்கிடும்வேலகளே யியம்புவேன்கேட்டிடுவாய்
காலையில்தானெழுந்து கங்குலிருட்டிலேயே
வீட்டிலுள்ளவேலகளே வேணதும்முடித்துவிட்டு
அதற்குமேல்கேளடியே அறிவுள்ளதோழியரே
சமையல்வேலகளெல்லாம் சட்டாய்முடிப்பதற்குள்
மத்தியிலேசற்றுநேரம் மசத்துமேநின்றுக்கால்
மாமியாரேடிவந்து மாபாவிசொல்வதைக்கேள்
என்னடிதடிசிறுக்கி ஒதிமரம்போல்நிற்குறாய்
வேலசெய்தஅலுத்துவிடாய்தீர்க்குராயோவென்பாள்
இதுயென்னயிழவுயென்று எண்ணியேயென்தோழி
அடுப்பண்டையேகுந்தி அறியதோர்சமையல்வேல
பார்த்துயிருந்தாலும் படுபாவிசொல்வதைக்கேள்

அடியேமூதேவிமூண்டம் என்னடியென்னேரமும்
அடுப்புக்குநோகுதென்று மிடுப்புப்பிடிக்குரூயோ
என்னடிதடிசிறுக்கி யெழுந்திருசீச்சியென்பாள்
இதுயென்னவம்புயென்று யெண்ணியே யீன்மதித்து
வேரொருவேலையைதான் வேண்டியேசெய்தாலும்
ஓரகத்தியோடிவந்து யுதாசினங்களாகவப்போ
என்னடிப்பெண்ணே நீ யேடாகுடங்களாக
செய்கின்றவேலைவிட்டு சிறைக்குறவேலைக்குப் போனுப்
என்றவள்தான்பேசு மித்துக்கமதுவோர்பக்கம்
இருக்கவேயெத்தனுக்குயியம்பக்கேள்தோழியரே
வேலைகள்யாவுமேதான் வடிவாய்முடிந்தபின்பு
சும்மாயிருப்பதோடு சொல்லக்கேள்தோழியரே
கல்வியிலாவதுவே கவனத்தைவைப்போமென்று
பெட்புடன்மனதிலெண்ணி புஸ்தகத்தையெடுத்தாலோ
அதைகண்டயென்மாமி அறைகுவதை கேள்தோழி
ஆமாண்டிநீபடித்து அறியவேபோதபண்ணி
ஆபீசுக்குப்போயி ரூபீசுவாங்கியல்லோ
சோபியில்போட்டுக்கொண்டு தான்வரப்போகுரூயோ
சீச்சீயெரிந்துவிட்டு வேலையைப்பாரடியென்பாள்
கேட்டெல்லோயென்மனது கலங்கியேகேள்தோழி
எடுத்ததோர்புஸ்தகத்தை யெரிந்துவிட்டுமேகேளும்
உடம்புகுளிப்போமென்று உத்தேசித்துப்போனலோ
அதுகண்டுமாமியவள் அறைவதைகேள்தோழி
போதண்டிபோதுமடி பேய்சிறுக்கிமூண்டகமே
எருழுகிறபிள்ளை யிளைத்துப்போனல்போகட்டும்
பரிசம்போகிறபெண்ணை பார்த்துவாயென்பதுபோல்
உழைக்கப்போனபிள்ளைக்குஒருகுடுவைதண்ணீர்காணை
உனக்கென்னடிசிறுக்கி மேனிமினுக்குமென்று [ம்
நெடநெடவென்றெலவோ நெட்டாகதான் பேசுவாள்
அந்தத்துக்கத்தைக்கேட்டு அறையக்கேள்தோழியரே
எடுத்துப்போனதண்ணீரை எடுத்துயெறிந்துவிட்டு
முகத்தைக்கழுவியானும் பொட்டிடலாமென்றலோ
கண்டெல்லோமாமிசொல்லுங் காதகத்தை கேள்தோழி
சரிதாண்டிசரிதாண்டி சாடைசரிதாண்டி
பட்டணத்துத்தட்டுனக்குபொட்டுதான்குறைவுஎன்பாள்
தலையேனும்வாரலா மென்றெல்லோபார்த்தாலோ
அதற்கவள்சொல்லுகின்ற அகடுகளைகேள்தோழி

கூந்தலிழுத்துப்பிடி யெழுத்துவேலைப்பாருமென்பாள்
இந்தவுக்கங்களான யாவையும்பொருத்துக்கொண்டு
துணியாகிலுமெடுத்துத் தோய்க்கவேபோனாலோ
அதைக்கண்டுஎன்மாமி அவள்வாய் புழுக்கசொல்வாள்
அடியேதடிசிறுக்கி யாமண்டிபோதுமடி
சல்லாபாவாடைகட்டி உல்லாசங்கொள்ளவிப்போ
உத்தேசஞ்செய்குரூயோ ஒதடிமூளியென்பாள்
கண்டெல்லோயிக்கொடுமை கடைசியில்கேள்தோழி
இதுவென்னயெழவுமே இங்கிருந்தால்வம்பேயென்று
எண்ணிநினைத்தெலவோ யெதிர்வீட்டில்தான்வாழும்
வேதவள்ளியினிடம் விளம்பக்கேள்தோழியரே
போயாவதுகாலத்தை போக்கலாமென்றுசென்றால்
அங்கையுமாமியவ ளதட்டியேயோடிவந்து
பங்கப்படப்பேசும் பாவத்தைகேள்தோழி
இருக்கும்வேலகளெல்லா மிருக்கட்டுமென்றுசொல்லி
இங்கேயெவண்டியுன்னை யிப்போதழைத்தா னென்பான்
இந்தக்கிழவிக்குமே யியம்பக்கேள்தோழியரே
ஒருவரும்நாயஞ்சொல்ல வருவதுமில்லையடி
தப்பியாராவதொன்று தான்சொல்லிவிட்டாலோ
அப்போதவள்வாயை அகலத்திரத்துமல்லோ
செப்புவதைச்சொல்வேன் சீராகக்கேள்தோழி

மாமியாராகிய கிழவி தான்வாழ்ந்ததைக்கூறல்.

போங்களடிப்போங்களடி பேசும்சித்திராங்கிகளே
எங்களிடகாலத்தி லியம்பிடக்கேளுங்கடி
இப்படிக்கெல்லாம்நாங்கள் யெதிர்த்துநடந்தோமா
தான்வாழும்போதெலவோ தங்கையரேகேளுங்கடி
ஓரகத்திகளென்ன ஓதநாத்திமார்களென்ன
மாமிமாமனரென்ன மச்சினர்மூத்தார்களென்ன [ன்
இவ்வளவுஜனக்கட்டி லிருந்தெல்லோதான்வாழ்ந்தே
ஐந்துபிள்ளைபெறும்வரையில் ஆளதிடம்பேசியறியேன்
தலைச்சன்பிள்ளையோடுதள்ளினேன்கொண்டையைநான்
இடைச்சன்பிள்ளைதனக்கு யிரவிக்கையுந்தள்ளிவிட்டே
மூன்றுவதுப்பிள்ளைக்குமோ திரமுந்தள்ளிவிட்டேன் [ன்

இப்படிக்கெல்லாம் நான் மிருந்துக்கொண்டிருந்தான்
ஒத்தாள்வோரகத்தியுமா ஒத்துமேதான்வாழ்ந்தோம்
இக்காலச்சிருக்கிச்செய்கை ஏதென்றுஎடுத்துரைப்பேன்
ஐஞ்சுபிள்ளைபெற்றாலும் ஐஞ்சாமல்தானுமோடி
அன்னக்கொண்டைகள்வெகு அழகாகப்போடுவதும்
மஜிலிங்கிப்பாவாடை மாருமல்கட்டுவதும்
பார்க்கவேதெற்றிபொட்டு பகட்டாகவிடுவதும்
தினுசுக்கொருரவிக்கை சீட்டிகளில்வாங்கிதைத்து
எழிலாகபோட்டுமேதான் மிருக்கியேகட்டுவதும்
ஆறிருந்தப்போதினும் அச்சம்பயமில்லாமல்
ஆம்படையாநண்டை அடுத்துக்குலாவுவதும்
பெரியோர்சிரியோரென்று பார்த்துமதியாதுவும்
இந்தசிங்கிநாதங்களை யெங்கள்காலமறியோம்
கொண்டவன்சரியாகக் கொண்டு ஈரப்பிஞைக்கால்
சிறுக்கிகள்தன்பாடுத் திண்டாட்டமாய்முடியும்
இந்தநடக்கையெல்லாம் யேற்குமோ குலபெண்கட்கு
வம்மிசப்பெண்களுக்கு வடக்குமோ அழகாமோ
என்றும்பலவிதமா யியம்பியேகிழவியரும்
பதங்களாகப்பாடி பாரதமுமுடிப்பாள்
கேட்டையாயென்தோழி கிழவியுடவாய்பேச்சை
இந்தக்கிழவியுட யிமிசையாம்ரோதனைக்கே
நாகரீகங்களையும் தானுமேநீக்கிவிட்டு
தலையொருவேஷமுமாய்த் துணியொருவேஷமாக
இருக்கின்றேனிக்கெதியில் இன்னங்கேளென்தோழி
மாமியாரிடத்தில்படும் மாகஷ்டமானதெல்லாம்
ஒருபக்கமிருந்தாலும் ஓதக்கேள்தோழியரே
ஆம்படையான்தன்னுலே யான்படுந்துன்பமதை
சகிக்கவுமாகுமோதான் சாற்றமுடியுமோதான்
சொல்லிமுடியுமோதான் சுந்தரியே யென்தோழி
அடியம்மாயதையுங்கொஞ்ச மறைகுவேன்கேட்டிடுவாய்
அகடுமாமிசெய்கொடுமை ஆளனிடம்சொல்லப்போனுல்
அப்போதவர்சொல்லும் அதிசயங்கேள்தோழி
டியாம்நான்சன்வ்யென்று தானவருமேதோசொல்லி

அதையெல்லாமென்காதிற் போடவேண்டா மென்கிறீர்
இவருடத்தொந்திரவோ யியம்புவேன் கேள்தோழி
அடியேதடிப்பெண்ணே அறிவுகெட்ட மாடேகேள்
விடியகாலமெழுந்து விளங்கவே நீயுமுந்தி
முகத்தையுஞ்சுத்திசெய்து மெல்லியரே பொட்டுமிட்டு
பின்புமற்றவேலைகளே போய்செய்யக்கூடாதா
எப்போதுபார்த்தாலும் யென்னடியுன்முகத்தான்
போடையாயிருக்கிறதே பரச்சியிலுங்கேடாக
வீட்டிலுள்ளவேலைதீர்ந்து ஒழிந்ததோர்வேளையிலே
நால்வருடத்தேவாரம் நவிலுமுதலாகயின்னம்
அரியநூற்களைத்தேடி யன்பாய்பார்க்கொண்ணுதா
சுத்தயென்னவரவரநீ சோம்பேறியாகிவிட்டாய்
தேகத்தைசுத்திசெய்து துணிகளையுந்தான்தோய்த்து
கட்டக்கூடவுனக்குங் கற்றுக்கொடுக்கணுமா
இதற்குக்கூடவாபிறர் சொல்லிகொடுக்கவேண்டும்
என்றெல்லோயென்புருஷ னியம்புவார்கோபத்துடன்
அச்சமயத்திலேனும் யானுங்கேள்தோழியரே
குடும்பத்தின்துக்கத்தைக் கூறலாமென்றுபோனால்
அப்போதுஎன்புருஷ னதட்டியென்னை யேதுரைப்பார்
என்னடிடெவில்நீ கண்டபடிபினத்துகிறாய்
போதுமடிவாயைமூடி போடியப்பாலேயென்பார்
இப்படிக்குத்தானுமல்லோ யேத்திழையே தோழியரே
மாமியார்வீட்டினிலே மாகஷ்டம் பட்டுவாரேன்
கேட்டாயோதோழிஎன்று கீர்த்தியுள்ளசென்னைமீனுள்
தன்னுடையதுயரங்கள் தானுரைத்து மேமுடித்தாள்.

கிருஷ்ணம்மாள் தன் துயரத்தை அக்கமாருடன் தங்கைமாருடன் கூறல்.

அக்கமாரேதங்கைமாரே அன்புள்ள நேசிகளே
மாமியெனபடுத்தும் மருந்துயரை யென்சொல்வேன்
வாழவந்தயென்கொடுமை வரைகுவேன்கேட்டிடுவீர்
நாட்டினில்தான்யேன்தான் பெண்ணுய்ப்பிறந்தேனே
அத்தைவீடுயென்றலவோ ஆசையாகநானிருந்தேன்
அவளென்னையிப்பொழுது அக்காமாரே தங்கைமாரே
சொத்தைபாக்குவெற்றிலைக்குஞ் சுகமில்லாசெய்குருளே
பாட்டிபாட்டி என்றலவோ மேட்டிமைநான் கொண்டே
அந்தபாட்டிமாமியிப்போ வாட்டி வதக்கிறுளே [னே
அப்பன்கூடப்பிறந்தா ளென்றுமேநானிருந்தேன்
தந்தைகூடதான்பிறந்தசொந்த அத்தைஎன்றிருந்தேன்
இப்படியாய்நானிருக்க யென்னையிந்த பாதகியும்
தப்பாய்நடத்திவந்தால் தையல்நான்யென்னசெய்வேன்
ஆறிடத்தில்யான்சென்று ஐயோமுறையிடுவேன்
இதுவென்னயவதியோதான் யியம்புங்களக்கமாரே
ஆணுய்பிறந்தாலே ஆகும்அருமையென்றும்
பெண்ணுய்ப்பிறந்தாலே பிழையாமெருமை யென்றும்
அவளுமேயென்னேரம் ஆட்டிப் படைக்குருளே

தன்மகளைப்பெற்றதுபோல் என்னைஎன்தாய் பிறவிலையா
என்னையுமென்தாயார் யெழிலாகத்தவமிருந்து
பெற்றஅருமையென்ன பேரிட்டநேத்தியென்ன
வளர்த்தவயணமென்ன வாழ்வளித்தகீர்த்தியென்ன
நாநிருந்ததற்கும்வளர்ந்ததற்கும் ஏந்திழைஅக்கமாரே
இந்தபெரும்புலிகையில் எனைபிடித்துகொடுத்துவிட்டா
நான்-பாடுகள்பட்டறியேன் பட்டினியிருந்தறியேன் [ர்
அடிமைவேலைசெய்தறியேன் அவமானம்பட்டறியேன்
எனக்கு-சங்கடத்தாலிகட்டி சஞ்சலத்தில்விட்டார்களே
நிழலுமேநிற்பதற்கு நல்லதாயிருந்தாலும்
0 மூசுடுபோல்லாதாக யிருப்பதுபோலவேதான்
என்தருமதுரையவரும் நல்லவராயிருந்தாலும்
என்மாமிபாவிவனக் கண்ணியாயிருக்கிறாளே
என்கணவனைடெலவோ யானின்றுபேசிருந்தால்
வந்துவிடுங்கிழவிக்கு வயற்றெறிச்சலுமெத்த
படுக்கையிலேபேசினுக்கால் தலையணமந்திரமென்றாள்
என்னமாயவளுக்கதி யிருக்குமோவறியேனம்மா
எப்போதுபார்த்தாலும் யென்மீதெரிந்துவாறாள்
என்னயிவள்கணவனையும் யிழுத்துமேகொண்டதுதான்
அல்லதுயிவள்பிள்ளையைத் தலையைத்திருகினது
மகளோடுநானுமென்ன மல்லுக்கொடுத்ததுவும்
புருஷன்சம்பாதனைக்கு பாத்திரியாய்நானிருக்க
என்னையெந்தவிதத்தும் ஏறவிடாபுறங்கழித்து
விட்டியிவள்நடுவில் வந்துவிழுகுறாளே
சட்டிபானைகழுவுவது சரியாகுதென்வேலை .
சம்பாதனைவாங்குவது சரியவள்வேலையாம்
வீட்டைப்பெருக்குவது வெகுளியதுயென்வேலை
பணத்தைவைத்துயாளுவது பாவியவள்வேலையாம்
ஆக்கியுறிப்பதுடன் எல்லாமேயென்வேலை
அளந்துபடிகட்டுவது அதிகாரமவள்வேலையாம்
அக்காளன்படுஞ்சிறுமை ஐயையோ போதுமம்மா
மாமியாரிடத்திலேநான் மட்டிபட்டமும்பெற்றேன்
பட்டிஎனும்பெயரெல்லோ பரிவாகவாங்கிகொண்டேன்
தாசிஎன்றும்வேசிஎன்றும் தானுறைக்கபேரெடுத்தேன்

---

0 மூசுடுயென்பது மரத்தடியிலார்த்து வருபவர்களைக் கடித்துவிடுவ தால் நகிக்கக்கூடாத அவஸ்தையுள்ளபண்ணும் கட்டெறும்பைப்போன்ற ஓர் சென்னிற எறும்பு.

தந்திரக்காரியென்று தானுமேபேசப்பெற்றேன்
மந்திரக்காரிபட்டம் மாறுமல் வாங்கப்பட்டேன்
அக்காமாரேதங்கைமாரே அனைவருங் கேட்டிங்கள்
இத்தனைநாள் நான்பட்ட யித்துயரம்போதுமம்மா [ம்
இனிநான்வாழ்ந்தவாழ்வு மிந்தமட்டும்போதும்போது
மனம்நொந்துதாய்வீட்டிலே மங்கையேபோயிருந்தால்
இப்படிப்பட்டதொரு என்னுடைய அத்தையென்னும்
கொடுஞ்சூலிமாமியவள் கொடுமையாயெனமேலும்
திருட்டுபட்டமொருவேளை தான்கட்டி வைத்திடுவாள்
பார்த்தோர்நகையென்னை பழிகளைசொல்லிடுவாள்
கேட்டோர்நகைக்கயென்னை கெடிதிகள்செய்திடுவாள்
சொல்லாதசொல்லெல்லாஞ் சொல்லுவாள்படுபாவி
இல்லாதும்பொல்லாதும் ஏற்றியேபேசிடுவாள்
இந்தவுயிரைவைத்து யிருந்துவாழ்வதைவிட
குளங்குட்டையில்விழுந்து செத்தாலுநலமாமம்மா
என்றுகிருஷ்ணம்மாளு மெடுத்தெல்லோதன் துயரை
சொல்லிமுடித்தாளே சீராகக்கேட்டிடவே

மதனசுந்தரி தன் துயரங்கவிர சினேகிகளிடங்கூறுதல்.

என்னதுமைசிறுமைகளை யறிந்தசினேகிகளே
என்னுடையத்துயரமதை ஏதென்று சொல்வேநம்மா
எனக்குமேவாய்த்திருக்கும் என்னுடையமாமியவள்

என்னைப்பாடாய்படுத்துவதுமல்லாமல்
அண்டைஅயல்வீடுசென்று அங்குள்ள பெண்களிடம்
என்மேல்பழிகூறித்தீயேடாக்குடமாக
வெழுக்கமானம்மில்லாமல் வாயில்வந்தபடியாய்
என்னையும்பற்றியல்லோ யென்னேர முறையிடுவாள்
அவள்சொல்லும்சங்கதியைஅறியவேதானுரைப்பேன்
சற்றுங்கவனமதாய் சினேகிகளேகேட்டிடுங்கள்

கிழவியாகியமாமியார்
கூறுதலைச்சொல்லல்.

அலைகைப்போலென்மாமி அடியம்மாசொல்வதைகேள்
எட்டுதெருகேழ்க்க எறுமையைப்போல்தானிறைந்து
என்மீதுகுற்றமதை யியற்றுவதைகேட்டிடுங்கள்
அடியம்மாயவளே நான் அறியாமல்கொண்டுவிட்டேன்
சமபத்துக்காரருட சரிமகளெலாமிருக்க
இத்தசனியனேப்பேசவுனை நான்கொண்டேதென்றும்
ஓடுகாலிசக்களத்தி வீட்டில்வந்துசேர்ந்தவுடன்
என்னுடையசம்பத்துக ளெல்லாம்பறந்தோடுதே
எட்டாம்பிறப்பான யிந்தசக்களத்திவந்தும்
எட்டிபார்த்தயென்வீடு சூட்டிச்சுவருகுறதே [டேன்
அறியாமலிவளே நான் அண்ணன்மகளென்றுகொண்
தெறியாமலிவளே நான் தமயன்மகளென்றுகொண்டேன்
வந்தவுடன்சிறுக்கிப் பந்தடித்தாளேயென்றும்
வரவரவுஞ்சிறுக்கி கழுதைமேய்க்குறாளென்றும்
என்றகதைபோலே யிவளுமேயானுளென்றும்
ஏறெடுத்துநோக்காத யெந்தன்மகன்தனையும்
என்னமோமந்திரங்க ளிவள்பண்ணிவிட்டாளென்றும்
அம்மாதினம்ராத்திரி அருமையென்மைந்தனுக்கு
தலையணைமந்திரங்கள் தானுமேயோதுறாளே
மந்திரமென்னமந்திரமோ மயக்கென்னயவள்மயக்கோ
சொல்லுகின்றயவள்சொல்லும் சொக்குப்பொடிதானே
அவள்வந்தப்பிறகெலவோ யருமையான யென்மகனும்
தாய்பிள்ளைஎன்றயன்பை தானருத்துவிட்டாளென்றும்
அன்பானயென்மகனும் அம்மாவென்றுவாய்நிறம்ப
அழைக்கின்றதையுங்கூட அடக்கிவிட்டாளேயென்றும்
உரிமையுள்ளஎன்மகனும் உத்தியோகத்திற்கேகி
உழைத்துவிட்டுத்தானும் ஓய்ந்துவரும்நேரமதில்

இவள்போய்ப் திரில் தின்று யிளித் துவிட்டவுட்னே
கொப்பெனவேயவனுக்கு குளிர்ந்தெல்லோபோகுறதே
வேணும்வினையுமென்று வெகுபாடுபட்டுதேடி
எனக்குமேயிப்பொழுதும் எதிரியேயாஞ்சொன்னும்
இவளப்போலவும்தான் என்னுடையகாலமதில்
புருஷனுடையெதிர் நின்று பேசியறியேனென்னும்
சேரப்பக்கத்தில் நின்று சிரித்து அறியேனென்னும்
ஏனென்றுகேட்டறியேன் பெத்துதுமுகம்பாரேன்
அடியம்மாயிக்காலத்து சிரிக்கிகளென்னமோதான்
சைகையாலுந்தங்களிட சாலக்குப்பேச்சியாலும்
பிரியத்தினாலுமல்லோ புருஷனைக்கேளுமம்மா
வாகாயிரண்டுநாள் வசியப்படுத்திக்கொண்டு
மாமியார்கண்பார்க்க மாமனார்பெதிரேநிற்க
நாத்திமார்காதுகேழ்க்க நாணம்சற்றுமில்லாமல்
புருஷனுக்கெதிர்மோர்ஜா போட்டுமோகொண்டுநின்று
சலலிசாய்சார்ந்துகொண்டு சருகானயிவளும்
என்னஒருகூச்சநாச்ச மெள்ளளவுந்தானுமென்ன
கொஞ்சங்கூடயில்லாமல் கொஞ்சுகுருவேயென்றும்
இத்தனையுஞ்சொல்லிமாமியின்னமுஞ்சொல்வதைகேள்
அடியம்மாகேளுங்கடியான்கொண்டமருகிகொள்ளை
இப்படிக்கிவளிஷ்டமா யெல்லாம்நடத்திவந்தால்
அதற்குநானேண்டியம்மாயிருக்கின்றதுவோசொல்லும்
மாமியாரைக்கேளாமல் மருமகளானவளும்
தலையைமுழுகலாமா தான்தலையைச்சிவலாமா
மஞ்சள்குளிக்கலாமா மைபொட்டியிடலாமா
பூவும்முடிக்கலாமா புதுதுணியுங்கட்டலாமா
உடமைகள்தானெடுத்து உடலில்தரிக்கலாமா
ஆசைபட்டதரியப்பட்ட தவள்வாங்கிதின்னலாமா
அன்னியர்கள்தன்னையிவள் அழைத்துமே பேசலாமா
இவளுக்குஅண்ணனுடு என்னேறமென்னபேச்சு
தம்பியோடிவளுக்கென்ன தான்பேச்சுகேளுமம்மா
இதுபெங்கேயடுக்குமம்மா இதுவென்ன ஆச்சரியம்
அவனையுங்கட்டியல்லோ அறைகுவேன் கேளுமம்மா
இரண்டுமூன்றுவருட மின்னமு மாகவில்லை
இதற்குள்ளேயவளுமல்ல குதிர்போலிருந்துக்கொண்டு
இரண்டுஆண்பிள்ளைகளை யீன்றுளே நோகாமல்
பெற்றெடுத்துக்கொண்டாளே பார்த்திருக்கும்போதே

இனிப்வளுக்குமென்ன யியம்புவேன்கேளுமென்றும்
அதிகாரமெல்லாமினி அவளுதேயாச்சுதென்றும்
என்னுடையமகளுக்கேதா னில்லேபேஓரான்பிள்ளையும்
ஆண்பிள்ளேபெற்றதினல் அவளுக்கே மிப்பொழுது
ஆனவமும்ஜாஸ்தியாய் ஆகிவிட்டதேயென்றும்
இதைஎல்லாம் பார்க்கப்பார்க்க என்வயிறெரியாதா
குடல்கள்குழுராதா கூவியவள்சொல்லுவதை
அறிந்தீராமாமிவார்த்தை அக்கைமாரே தங்கைமாரே
என்னுடையபாவத்தை யியம்பவுங்கேட்டீர்களா
இன்னமுமென்மாமி யியம்புவதைக்கேளீர்
ஆணைபெற்றும்பெரும்பாவி யாகிவிட்டேனேயென்றும்
என்றைக்குத்தொலேவாளோ என்குடிசெழிக்கவென்றும்
கையைகாட்டிகாட்டியவள் கருவிழுறுக்குருள்
அக்காமாரேதங்கை அறிந்தீர்களோ யென்துயரம்
என்றுமதனசுந்தர மியம்பிமுடித்தாளே.

குணபூஷணிதன் துயரத்தை சகோதரிகளிடஞ்சொல்லல்.

அன்புப்பிறியமுள்ள ஆனசகோதரிமார்களே
என்னுடையத்துயரமதை யியம்புகுறேனிப்பொழுது
சற்றுகவனமதராய்ச் செவிகொடுத்து கேழ்ப்பீரம்மா
தங்கைகளே,தானுமொரு தனவான்தன்வீட்டினிலே

பெண்ணுகயான் பிறந்து பெருமையுடன்வளர்ந்து
தனவானுடவீட்டிலேயே தானுமேவாழ்க்கைப்பட்டேன்
பிறந்ததுதான்புதுவைநகர் புகுந்தவிடம்பொன்னகரி
என்னுடையதாயாரும் பிறந்தநின்பிற்பாடு
என்னுடையதகப்பனுரும் பிதற்குமுன் னுகவேதான்
பதினுறுவருஷத்திற்குப் பார்க்கவேமுன்னுக
இரானுவவகுப்பிலேயும் நலமாகப்பேரேங்கி
தாஷ்டகமோடெலவோ தளகர்த்தராயிருந்த
என்னுடையஅத்தையவளின்றமகனுற்கு
என்னையும்பாணிக்கிரணஞ் செய்துக்கொடுத்தார்கள்
எனக்குக்கலியாணம் பெழிலாகத்தானுகி
நானும்புருஷன்வீட்டில் நலமாகப்போனவுடன்
வெகுதூரதேசத்திலே வாழ்க்கைபட்டுதானிருந்த
என்னுடையதாத்தி நாரின் பெழிலான புருஷனுத்தான்
ஜீவன்பிறிந்தெலவோ சிவலோகஞ்சேர்ந்ததாக
சமாச்சாரங்களங்கே சதுராய்வந்தகூப்படியால்
கேட்டெல்லோபெத்தன்மாமி கடுகனவேபப்பொழுதே
அந்தநல்லஊறுக்கு அப்பொழுதேபோயிவிட்டாள்
அவளுந்திரும்பிவர ஆச்சுதுபத்துமாதம்
அந்தபத்துமாதகாலம் அறையக்கேள்தங்கையரே
நானும்பென்புருஷனுமா நன்முகயிருந்துமல்லோ
திரேகமும்ஜீவனும் சேர்ந்திருப்பதைப்போலும்
கரும்பும்ரசமுமொன்முய் கலந்திருப்பதைபோலும்
சதையோடுநகமதுவும் சார்ந்திருப்பதைபோலும்
அதிகப்பிரீதியோடு அன்பாகநாங்கள் வாழ்ந்தோம்
எங்களிடசந்தோஷம் பியம்பக்கேள்தங்கையரே
நீடித்திருந்தாலே நிகழ்த்துவேன்கேளுமம்மா
இந்தஉலகமதை யாங்கள்சதமென்றும்
எண்ணிவிடுவோமென்முே அல்லதுவேறென்னமோதா
எங்களுடசந்தோஷ மிருக்கப்போகாதேஎன்றும் [ன்
கண்டவராகுமத்தக் கடவுளவர்மாற்றிவிட்டார்
எப்படியென்முலோ பியம்புவேன்கேளுமம்மா
பரிவாகத்தானுமல்லோ பத்துமாதஞ்சென்றபின்பு
ஏகியிருந்ததொரு பென்னுடையமாமியரும்
அமங்கலியாப்போனதொரு அவளுடைய தன்மகளும்
வந்தெல்லோசேர்ந்தார்கள வளமாகபத்தாமாதம்
அவர்களுமெங்களிட அன்பானகிரகமதில்

வந்துபிறவேசித்தது வருங்கிரகசாரமோதான்
வந்துநுழைந்தபோது வாகாய்கேள் தங்கையரே
நானுமென்பத்தாவும் நலமாகவப்பொழுது
அதிகநேசமோடு யான்தமாகவேதான்
சரசங்கள்பேசியல்லோ சல்லாபித்தேயிருந்தோம்
அதைகண்டமாமி நாத்திக் கதிகோபங்கள் பொங்கி
அவர்களுமப்பொழுது அடவாயெங்களைபார்த்து
கடூரமாகவேதான் கண்ணையுருட்டினதும்
ஆயிறங்கத்திவெட்டுக் காகசச் சமமாகவும்
இருந்ததுஅப்பொழுது யென்சொல்வேன் தங்கையரே
அந்தவோர்பார்வையிலே அகப்பட்டுநாங்களுமே
பட்டுப்போகாமல்தாங்கள் பரிவாய்பிழைத்ததுவும்
ஆர்செய்தபுண்ணியமோ அறியோமேதங்கையரே
அவர்களைக்கண்டவுடன் அகூஷணமே நானெழுந்து
அடிபணித்துநமஸ்கரித்துஅப்பாலேபோய்விட்டேன்
அப்போதுயென்மாமி அறைவதைக்கேளுமம்மா
என்னுடையபத்தாவை யெழிலாகத்தானைக்கி
அலகைபோல்வாய்திறந்து அவளுமேயேதுரைப்பாள்
என்னடாயென்மகனே யியம்புவதைகேளடா நீ
நானுமுன்தகப்பனுரை நலமாய் விவாகஞ்செய்து
இருபதாண்டுவரைக்கும் யிருந்தேன்மங்கிலியத்துடன்
மங்கிலியஸ்திரீயாக மகிட்சியுடன்நானிருந்தும்
அந்தயிருபதாண்டு ஆனதோர்காலமட்டும்
இரண்டொருவார்த்தைகூட என்னுடையகணவனுடன்
நானின்றுயெப்பொழுதும் நலமாய்பேசியறியேன்
புருஷன்வீட்டினில்வந்து புகுந்தடிவைத்தவுடன்
நாத்தினியாள்வந்த நங்கையருமேதுரைப்பாள்
புருஷனைதின்றுவிட்டுப் பேய்போலே நிற்கின்ற
என்னிடத்திலுந்தனுக்கு என்னபேச் சிருக்குதென்றுள்
அந்தமொழிகேட்டு அடவாகயென்புருஷன்
அடித்தவாய்துடைத்தாற்போ லவருமேவதுகேழ்ப்பார்
நாத்தினர்தன்னுடைய நாயகனிறந்துபோனால்
என்னுடையபெண்சாதி என்செய்வாளதற்குமேதான்
பெண்சாதியோடுதான் பேசினேனேதவிர
அன்னியஸ்திரீயிடத்தில் யான்பேசவில்லையென்றார்
அந்தமொழிகேட்டு அலங்காரிமாமியவள்
சீறியேயப்பொழுது செப்பும்மொழிகேளும்

அத்தகறுக்கியுட ஆவலினல்யிப்பேச்சா
கற்றுக்கொடுத்தாளோ காரியமாகவேதான்
என்றெல்லோஎன்மாமி என்சொல்வேன்தங்கையரே
குதித்தக்குதிப்புமவ ளாடின ஆட்டமுந்தான்
சதுருக்குவிட்டதொரு தாசிகூடயாடமாட்டாள்
என்னுடையநாயகரு மானியவராதலினல்
ஊர்சிரிக்கப்போகுதென்று உற்றுநினைத்தவரும்
பயத்துஒன்றும்பேசாம லிருத்துவிட்டா ரென்புருஷன்
அன்றுமுதல்பலநாளாய் அறையக்கேள் தங்கையரே
மாமிவாயும்நாத்திவாயும் மரத்தொருநா ளோயவில்லை
அன்றுமுதலென்மீது அடங்கலுமேசாதித்தும்
என்னுடையகோஷ்டத்தை யிவரடக்கவேணுமென்று
தீர்மானித்திவர்களுமே திடீலென்றுவப்பொழுது
வேலைக்காரிகள்தம்மை விரட்டியே தள்ளிவிட்டு
சார்ந்ததோர்வீட்டிலுள்ள சகலவேலைகளையும்
நன்முகவேதானும் தானேசெய்யும்படியாய்
எத்தன்தலைமேலே யேற்றிச்சுமத்தினார்கள்
இன்னங்கேள்தங்கையரே எத்தன்தலைவிதியை
என்னுடையபத்தாவிற்கு யானுமேகேளடியே
அன்னமும்நான்படைத்து அழகாகயின்னமுந்தான்
தாம்பூலமுங்கொடுத்து தங்கையரேமுதலியதோர்
வேலைமுதலான தும் விளங்கவேயானுமல்லோ
செய்குறதாயிருந்தால் செப்பக்கேள் தங்கையரே
என்னுடையகஷ்டத்தை எடுத்துமேசொல்வேனுனல்
படுகுமென்கஷ்டத்திற்கோர் பரிகாரமாயிருக்கும்
என்னுடையபுருஷனுக்கு வுள்ளதோர்வேலையெல்லாம்
மாமியும்நாத்தினியும் மாறிமாறிசெய்துக்கொண்டு
ஓடிவோடிப்புருஷனுக்கு உபசரணையவர்கள்செய்து
கஷ்டமானவேலைகளே கன்னியரே சொல்லுவன்கேள்
எனக்கென்றுநேமித்து யென்பங்கா வைத்துவிட்டார்
ஆகினுமின்னமெந்தன் அருந்துயரைக்கேளுமம்மா
பொல்லாதயென்விதியைப் புகலுரேன் கேளுமம்மா
எல்லவரும்சாப்பிட்டு யெழுந்ததின்பிற்பாடு
இலையிலேவிட்டெழுந்த யெச்சசாதத்திற்குநான்
காத்திருக்கவேணுமடி கனத்தபசியானலும்
அல்லதுயென்கெதியை யறைகுவேன் கேளுமம்மா
எனக்குப்பசித்தபோது யான்போசிக்கக்கூடாது

அந்தயெச்சயன்னங்கூட அரைவயருகாண்பதில்லே
என்னுடையமாமி நாத்திஎந்திழையேசொல்லுரேன்கே
வந்தநாளிதுமுதலாய் வாகாகயானுமேதான் [ள்
என்னுடையபுருஷனோடு யானின்றும்பேசுவது
குதிரைக்கொம்பாகியல்லோ கோதையரேவிட்டதடி.
நானொருபக்கத்திலும் நாயகனேர்பக்கத்திலும்
இருப்பதேயல்லாமல் எந்திழையே சொல்லுவன்கேள்
ஒருவர்க்கொருவர் நாங்கள் பார்க்கவுங்கூடாமலும்
தயனபாஷைகள்கூட தவிலவிடமில்லாமலும்
போயியும்விட்டதடி பொற்கொடியேதங்கையரே
இயம்புவேனென்குறையை யின்னமுங்கேளுமம்மா
இராக்காலங்களிலேதான் என்னுடையபத்தாவின்
படுக்கையறைக்குள்ளே நான் பிரவேசிக்காதபடி
அந்த அறைதனக்கு யுமர்த்தவாசற்படியின்
ஓரத்தில்தானுமல்லோ ஓதக்கேள்தங்கையரே
தாயும்மகளுமாகத் தழுவிப்படுத்துக்கொண்டு
ஒருவர்மாற்றியொருவரங்கே உற்றுவிழித்தலேவோ
பாராகொடுப்பதற்கு பாபிகள்தலப்பட்டார்கள்
இன்னமுமென்குறையை யியம்புவேன்கேளுமம்மா
இவ்வளவுமிவர்கள்செய்யும் யேடாகுடத்திற் கெல்லாம்
இடமுங்கொடுத்துக்கொண்டு எந்திழையேஎன்கணவர்
உபேக்ஷையாயவர்தனக்கு யுள்ளத்திலிருப்பதுவும்
எனக்குமனவேதனையா யிருந்தாலுந் தங்கையரே
மானத்திற்கஞ்சியவர் மௌனமா யிருப்பதென்றும்
அவருக்குயென்மீதில் அன்புயிருக்குமென்றும்
எண்ணியேநானு மேந்திழையே சொல்லுவேன்கேள்
சகலமாகயென்மீதில் சார்ந்துவருகின்ற
கஷ்டநஷ்டங்களுடன் காணும்திஷ்டரமுற்றும்
பொருமையுடன்சகித்து பெண்ணுளும்நானிருந்தேன்
இப்படிக்காகவல்லோ எந்திழையே நானிருக்க
மாமியும்நாத்தினியும் மாபாவியானவர்கள்
வஞ்சநினவுகொண்டு நெஞ்சில்கபடவைத்து

என்னைகெடுக்கவென்று யெண்ணிமன தில்வைத்து
என்புருஷன்வீட்டினிலே யிருக்கும்வேளை பார்த்து
விபசாரிகளையுமே வேணதோர்பேர்களையும்
அடிக்கடிவீட்டிற்கு படவாகவரவழைத்து
அவர்களுடன்தல்லவார்த்தை அன்பாகவேபேசி
என்னுடையபுருஷனுக்கு மேத்திழைமாரவர்களும்
சினேகத்தையுண்டுபண்ண சித்தமிகவுங்கொண்டு
சகலபிரயத்தனமும் சார்ந்துமேசெய்தார்கள்
என்னிடத்திலென்புருஷன் பேசக்கூடாதென்றும்
தள்ளியேனைவிலக்கித் தானந்தப்பாபியர்கள்
அன்னியஸ்திரீயோடெந்தன் ஆளனும் பேசும்படி
முயர்ச்சிகள்செய்துஎன்னை முழுதுங்கெடுக்கயென்னை
என்னுடையமாமிநாத்தி யேற்பாட்டை பார்த்தீர்களா
இப்படிக்கெல்லாமல்லோ எத்தனஞ்செய்தவர்கள்
எப்படிப்பட்டப்பொல்லா தவர்களாயிருக்கவேண்டும்
என்றுமேநீங்களுமே எண்ணியறிந்திடுங்கள்
தக்கப்பிரியமுள்ள தங்கைமாரேயின்னமுங்கேள்
என்னைப்படித்துகின்ற யிக்கொடுமை யானதெல்லாம்
தூரதேசமதனிற் றுலங்கவேதானிருக்கும்
என்னுடையதகப்பனுர்க்கு ஏந்திழையேதங்கைமாரே
கடிதமூலமாகவே கண்டுநான்தெரியவித்தால்
உடனேயெனக்குமல்லோ உபகார மாகுமென்று
சொல்லுமொழியதனில் சந்தேக மொன்றுமில்லை
மாமிநாத்திசெய்வதற்குப் பரிகாரமாயிருக்கும்
ஆகிலுமின்னமுங்கேள் அறைகுவேன்தங்கையரே
என்னுடபாட்டனுறும் இரத்தத்தின்பிற்பாடு
என்தகப்பனுறெலவோ யிருந்துமுதன்மையாக
அவருடையதங்கையான அரக்கியென் மாமிதன்னை
யிக்கஉபசரித்து மேலாகத்தான்வளர்த்தும்
விளங்கவிவாகஞ்செய்துக் கொடுத்ததுத் தான்தவிர
அவளையுமவள்பிள்ளை யானயென் பத்தாவையும்
நெடுங்காலமாதரித்து நீடித்தப்படியாலும்

துஷ்டர்க்குக்கண்டருக துலங்குமென் தீகப்பனையும்
அவரையுங்கண்டாலே யறைகுவேன்கேள்தங்கையரே
கருடனைக்கஷ்டதொரு பாம்புப்போலாகவல்லோ
என்னுடையமாமியாரும் எனக்கெதிரிநாத்தினியும்
பெட்டியில்பாம்புபோலே பேசாதடங்கியல்லோ
இருப்பார்களென்பதுவும் யியம்பிடநிட்சயமே
ஆகிலுத்தங்கைமாரே யறியவே நீர்கேளும்
என்புருஷன்வீட்டினிலே யென்னை நடத்துகிற
கொடுமைகளானதெல்லாங் கொம்பனையே தங்கையரே
தாய்தகப்பன்மார்களுக்குத் தான்தெரிய வைப்பதுவும்
பதிவிரதைநம்பளுக்குத் தகுதியதுவல்லவென்றும்
க்லஹத்துக்காஸ்பதமாய்க் காரணமாகுமென்றும்
நினைத்துமேதானெலவோ நேரிழையே தங்கைமாரே
என்னுடையதகப்பனுமிச்செய்திதானறிய
கடிதங்களெழுதாமல் கல்வியரே யிருந்துவிட்டேன்
இப்படிக்குஎன்துயரை யானேசகித்துக்கொண்டு
என்னுடையபுருஷனிட்டம் எவ்வகையாகிலுந்தான்
தெரிவிக்கவேண்டுமென்று தீரமது நான்கொண்டு
நிலையாகயென்மனதில் நிட்சயித்துக்கொண்டெலவோ
ஒருநாள்கேள்தங்கையரே யுற்றநடுஜாமமதில்
அல்லவேயெல்லவரும் தூங்கியப்பிற்பாடு
நானுமெழுந்துசப்தம் நாயகமேசெய்யாமல்
என்னுடையபத்தாவி னிருக்கும் விடிதியான
படுக்கையரைக்குநேரே பரிவாகயானுஞ்சென்று
அப்போதுஅங்குநேர்ந்தஅவதியைஎன்னசொல்வேன்
ஆளன்படுத்திருக்கும் அவ்வரைவாயற்படியின்
ஓரத்தில்தானெலவோ ஓதக்கேள்தங்கையரே
மாமிநாத்தினியென்னும் மாபாவியிரண்டுபேரும்
காவக்காரிகளாகக் கார்த்துப்படுத்தார்கள்
சேவகர்கள்போலே சேர்ந்துபடுத்திருந்தார்
அடங்காரமாமிநாத்தி யவர்களுடக்காவலையும்
கடந்துஉள்ளேபோவதற்குக் கருதியே நானுமப்போ

யோசித்திருவகையும் ஓர்தாண்டாய்தாண்டிலேன்னுன்
அப்போதுஎன்காலும் அடவாகத்தான்தடிக்கி
அடியற்றமரம்போலே யவர்மேல்விழுந்துவிட்டேன்
அப்போதுதர்னெலவோ கேளுங்கள்தங்கைமாரே
இருட்டாயிருந்ததிலுல் யென்னையவர்களுமே
கையால்தடவியல்லோ காதகிகள்தான்பார்த்து
நானென்றுத்தானுமல்லோ நன்முகவேதெரிந்து
கண்டுபிடித்துக்கொண்டு கட்டாணிமாமிநாத்தி
அடிக்கவுமெத்தனையு மாரம்பஞ்செய்தார்கள்
பிடித்தப்பிடியவரும் யென்னைவிடாமலேதான்
அடித்தப்படியால்தான் அடிபொருக்கமாட்டாமல்
நகத்தாலவர்களையும் நானங்கேகீறையிலே
இதுதான்சாக்கென்றவர்கள் ஏந்திழையே தங்கைமாரே
தங்களுடநகங்களாலே தாங்களேயப்பொழுது
அதிகமாகக்கீரிக்கொண்டு அழுதவரு மேதுசொல்வார்
கூகூவென்றெலவோ கூச்சலவர்தான்போட்டு
எங்களைவந்துமிப்போ கொல்லுராளென்றுகூவ
அப்போதுஎன்கணவர் அலறிவிழித்துக்கொண்டு
உடனேயவர்தானெழுந்து உத்தமருமப்பொழுது
நிபமுடன்யெங்களிடம் தீவிரமாயோடிவந்தார்
கள்ளனென்றுஅவர்மதித்து கடுகெனவேயோடிவந்து
திருடனென்றுஅவர்மதித்து திடீரென்றுவோடிவந்து
எழிலாகத்தானும் என்னையும்பார்த்தேதுகேழ்ப்பார்
என்னடிப்பெண்ணேநீ யிந்தநடுஜாமத்திலே
உன்னுடைய அறையைவிட்டு யிங்குநீ யேனைவந்தாய்
என்றயதட்டியல்லோ என்னையவர்கேழ்க்கையிலே
அப்போதுநானுமல்லோ அடவாய்கேள் தங்கையரே
உண்மையானகாரணத்தை யுத்தமருடனேசொல்ல
வெட்கங்கள்பட்டுக்கொண்டு வாய்திரக்கக்கூடாமல்
கள்ளப்புருஷன்வீட்டில் கன்னியும்தான்போயி
அகப்பட்டுக்கொண்டவள்போல் அதிகபயமுமுற்று
வில்லமுடியாமல் விலத்துமிகவிழித்தேன்

அப்போ துதானுமல்லோ அறையக்கேள் தங்கையரே
அடங்காரமாமி நாத்தி அடமாகவப்பொழுது
பழிகாரமாழி நாத்தி பாதகிகளப்பொழுது
இதுதான்சமையமென்று யிருவருமேதுரைப்பார்
பார்த்தையாயுன்னுடைய பழிகாரப்பெண்சாதியும்
இந்தநல்லராத்திரியில் யிங்கேயவளும்வந்து
எங்களைச்செய்தகோலம் ஏதென்றுசொல்வோமப்பா
பார்த்தையாஎங்கள்காயம் பழிகாரியவள்செய்ததை
கண்டையாயெங்கள்காயம் கள்ளியவள் செய்தகொள்ளை
என்றுயென்மேல்பழிக ளிருவருந்தானுறைத்து
எத்தவிதத்திலேயும் என்னைகெடுக்கவெண்ணி
அப்போதிருவர்களும் அடமாகயேதுரைப்பார்
எந்தனுக்குத்தானுமல்லோ ஏந்திழையேதங்கைமாரே
பேயாவதுஅலத்தூப் பயித்தியமாவதுதான்
பிடித்திருக்கவேணுமென்று பேசியேசாதித்தார்கள்
பழிகாரியவர்களுமே பசப்பினஅம்மொழியை
நிசமென்றுயென்கணவன் நிட்சயித்து அம்மொழியை
என்னையுமப்மொழுது என்கணவன்தானுமல்லோ
பிடறியில்கையைவைத்து பிடித்துதள்ளிகொண்டுபோயி
என்னுடைய அறைக்குள் என்னைவிட்டுகேளுமம்மா
கதவையிழுத்துசாற்றி கடுகெனவேயப்பொழுது
வெளிபக்கம்தாதாங்கி விரைவாகப் போட்டுவிட்டார்
கேட்டீரோயென்கெதியை கீர்த்தியுள்ள தங்கைமாரே
அறிந்தீர்களாயென்கெதியை அன்புள்ள தங்கைமாரே
புருஷனையான்பார்க்கப் போனதோர்கொள்ளையம்மா
கணவனைதான்பார்க்க கன்னிதான் போனகொள்ளை
இப்படிக்கெல்லவோதான் எனக்குசம்பவித்ததென்று
நினைத்துயந்தராமுழுதும் தானழுதக்கண்ணீரும்
அந்தஅறைமுழுதும் அம்மாநிறைந்ததுவே
இப்படிக்காகவல்லோ அன்றிரவு சென்றபின்பு
மறுநாள்விடிந்தவுடன் மங்கையரே சொல்லுவன்கேள்
வைத்தியரைத்தேடியல்லோ வாகாயழைத்துவந்தார்

மந்திரவாதிகளை மாவிரவாய்கூட்டிவந்தார்
எல்லவரும்வந்தெலவோ யேகமாய் கூடிவிட்டார்
அப்போதவர்கள்சொல்லுமதிசயத்தைஏதுசொல்வேன்
வைத்தியரானவரோ வழுத்துவதைக்கேளுமம்மா
எனக்குப்பயித்தியமும் எறிருக்குதென்றார்கள்
சங்கடம்நேருமென்று சாதித்துச் சொன்னார்கள்
மருந்தியவேணுமென்று மருமமுரைத்தார்கள்
அப்போதுமாந்திரீக ரவர்களுமேபேதுரைப்பார்
பொல்லாதபேயெனக்குப் பிடித்துயிருக்குதென்றும்
அல்லல்படுத்துமென்றும் அவகேடுநேருமென்றும்
வாயில்வந்தப்படியுளறி வாதித்துநின்றார்கள்
அவர்களிலேயொருவன் யறைகின்ற வித்தையைகேள்
எங்கெங்கேதானிருந்துயென்னையுந்தானுமல்லோ
நூற்றெட்டுப்பேயதுவும் நேராகத்தூன்பிடித்து
இருக்கின்றதென்றெலவோ யியம்பினைனக்கெடுவான்
அப்போதுதங்கையரே அறையக்கேளெந்தனுக்கு
அம்மொழியைக்கேட்டவுட னங்கமெலாந்தான்பதரி
பாவியவன்சொல்லியிலே பாவாய்மனமுருகி
என்னையறியாமல் எனக்குமேயப்பொழுது
கோபம்பெருகியல்லோ கூருகதேர்ந்திடவே
அப்போதுதங்கையரே அங்கிருந்தஓர்கல்லை
எடுத்தெல்லோவப்பொழுது எறிந்தேனவன்மேலே
அப்போதனேவர்களும் அறைவதைக்கேளுமம்மா
என்னையும்பேய்பிடித்து யிருக்கின்றதென்பதற்கு
இதுவோதிஷ்டாந்திரங்கள் என்றவர்சாக்ஷிவைத்து
பிரதக்ஷமானருசு புருப்பாகிவிட்டதென்றும்
என்சொல்வேன்தங்கையரே எனக்குநேர்ந்தகெதியை
ஒன்றும்யோசியாமல் உடனே யெனைப்பிடித்து
கைவிலங்குக்கால்விலங்கு கழட்டாபெருவிலங்கு
போட்டெல்லோஎந்தனுக்கு பொல்லாகொடுமைசெய்து
தலையைச்சிறைத்துமல்லோ தான்விட்டார்தங்கையரே
இப்படிமந்திரவாதி யிமிசையொருபக்கஞ்செய்ய

வை தியரொருபக்கம் வத்துதொத்திரவுசெய்ய
பண்டிதனும்மாந்திரியாம் பாவியிருவர்சேர்ந்து
ஒருவர்மாற்றியொருவரென்னை ஓதக்கேள் தங்கையரே
செய்தச்சித்திராக்கினை செப்பவுமெத்தனுக்கு
ஒருவாயும்போதுமோதான் உரைக்கயனைத்தையுமே
இப்படிக்கிவரிமிசை என்னையுஞ்செய்கையிலே
அப்போதவர்களையும் அறிவையரே யான்பார்த்து
என்னேருயிருக்குமே இத்தனையெமன்வேண்டுமோ
ஏதுக்குவீணுக யிழவுக்கொடுக்குரீர்கள்
என்னைப்பிடித்திப்படி யிமிசைகள் செய்குரீர்கள்
பேயுமில்லைபயித்தியமில்லை பேசயெனக்கொன்றுமில்லை
வீணுகயெந்தனையேன் வாதித்துவிடுகிரீர்கள்
என்றுயவர்களுக்கு யிரக்கமுண்டாகும்படி
நான்கற்றவித்தையெல்லாம் நலமாகக்காட்டியுமே
என்னத்தையானுரைத்து மேந்திழையே யெத்தனுக்கு
போல்லாங்கேயாச்சுதெல்லா புகலக்கேள் தங்கையரே
நன்மையனுக்கூலம் நாடாமல்போச்சுதம்மா
இன்னமுமென்குறையை யியம்புவேன்கேட்டிடுவீர்
நானும்யென்புருஷனோடு நலமாகத்தான்கூடி
இருக்கின்றகாலமதில் யெனக்குக்கோப்பமுண்டாகி
இருப்பதுவுமெத்தனுக்குத் தெரியாமலிருந்ததப்போ
இப்போகெற்பச்சின்னங்கள் எனக்குமேதோன்றியதால்
கர்ப்பிணியாயிருக்கின்ற கன்னியெனக்குமேதான்
மருந்துக்கொடுப்பதுவும் சரியல்லவென்றுமேதான்
வணங்கிவைத்தியருக்கு வாகாய்த் தெரியவித்தேன்
அப்போதுதானெலவோ யறைகுவேன்கேள் தங்கையரே
கருப்பணிதானென்றுத் தெரிந்தமாத்திரத்திலேதான்
என்னுடையமாமியற்கு மீடழிவாள்தாத்தியற்கும்
என்னமாயப்பொழுது யிருந்ததென்றுல்கேளுமம்மா
அன்றைக்குத்தானவர்கள் ஆளநிறந்தாப்போலும்
எண்ணுதுமெண்ணியவர் யேக்கம்பெருதாகியல்லோ
துக்கசாகரத்திலவர் தோய்ந்தமிழ்ந்துநின்றுவாடி

முன்னிருந்தவஞ்சத்திலும் மூன்றுபங்கதிகமாக
என்னைப்பகைக்கவுமே யெடுத்துதுஜங்களுமே
ஆரம்பஞ்செய்தெலவோ அடங்காரமாமிநாத்தி
என்னுடையக்கொர்ப்பமதை யெந்தவிதமேனும்
அழிக்கவேணுமென்று யவர்மனதிலெண்ணங்கொண்டு
வைதியற்குத்தானேதி வஞ்சகமாமிநாத்தி
அவிழ்தப்பிறையோகம் அவர்களைச்செய்யும்படி
எத்தனம்செய்துமல்லோ யிவர்களிருக்கையிலே
எண்ணத்திலிடிவிழுக யியம்புவேன்கேளுமம்மா
இராகூதருக்குமொருப் புரோகிதருண்டாமென்று
சொல்லுக்குமெய்யாக சோதனையாகவேதான்
என்னுடையமாமியாரை எழிலாபுடக்கத்தக்க
சாமியாரொருவர்வந்துச் சதுராகத் தான்சேர்த்தார்
அவராரோவென்றுலோ அரியவேசொல்லுவன்கேள்
என்னுடையதகப்பனார்தான் எத்திசீழையே தங்கைமாரே
அவருமேயென்னுடைய அலங்கோலத்தன்னைபார்த்து
பார்த்தவுடனேயவர் பதரியுள்ளங்கலங்கி
எந்தனைக்கட்டிக்கொண்டு யென்தகப்பன்தான்கதறி
மகளென்கோரத்தைக்கண்டு மாரூத்துயரமுற்று
மனதைநிருத்தியவர் மருமத்தை யறியவென்று
எந்தன்முகத்தையவர் யேரெடுத்துத்தான்பார்த்து
எனக்குப்பயித்தியமா யல்லவா யென்றுமேதான்
நிட்சயிக்கும்பொருட்டு நேராகயென்தகப்பன்
என்னையும்பார்த்தலவோ யின்னங்கேள் தங்கைபரே
பலபலகேழ்வியென்னை பரிட்சையுடன் தான்கேட்டார்
அவைகளுக்குதானுமேதான் அடவாகவப்பொழுது
தகுதியாய்மறுமொழிகள் தான்சொன்னதுத்தவிர
என்னைப்படித்திவந்த யிமிசைகள்யாவையுமே
பாதகிமாமிநாத்திப் பண்ணக்கொடுமைகளை
நடந்தக்காரியங்களை நன்முகத்தானெடுத்து
ஆதியோடந்தமாக அனைத்தும்சுருக்கமதாய்
அறியவே தகப்பனுர்க்கு யாவும்தெரியவித்தேன்

தெரிவித்தவிபரமதை தானுரைப்பேன் தங்கையரே
என்னவென்றுலதனையுமே எடுத்துரைக்கிறேன்கேள்
மாமிநாத்தினியவர்மே மருமமதாகவேதான்
அதிகமாக்குற்றமொன்றும் யானெடுத்து சொல்லாமல்
தாமக்கோளாகவேதான் தானவர்கள் செய்ததெல்லாம்
இரண்டொருகாரியங்க ளெடுத்து வெளியுமிட்டேன்
அப்போதுயென்தகப்பன் ஆற்கவேயாலோசித்து
எந்தனுக்குமல்லோ ஏந்திழையே சொல்லுவன்கேள்
பயித்தியமில்லைசயித்தியமில்லைபசாசுமில்லைனவரித்து
என்தகப்பனுநெலவோ ஏந்திழையேயகூணமே
எந்தனுக்குமாமிதாத்தி யெழிலாகப்பூட்டிவைத்த
கைவிலங்குகால்விலங்கை கண்டிக்கவாரம்பித்தார்
அப்போதுதங்கையரே யரும்பாவியென்மாமி
உடனேயெழுந்திருந்து ஓடிவந்து அவசரமாய்
என்தகப்பனுருடனே ஏதுரைப்பாளப்பாவி
அண்ணவேயண்ணவே அருமையுள்ளயண்ணவே
அவசரப்படவேண்டாம் பொருங்கள்பொருங்களண்ண
நீங்கள்செய்வதையிப்போ யோசித்துசெய்யுமண்ண
ஆக்கப்பொறுத்தவரும் ஆறப்பொருங்களண்ண
ஆஞ்சியோஞ்சிப்பாருமண்ண யல்லாந் தெரியுமண்ண
இப்போதிவள்தனக்கு யியம்புவேன் கேளுமண்ண
விலங்கைதிவர்த்திசெய்தால் வெகுமோசம் நேருமண்ண
ஆறையாவதுயவள் உபத்திரஞ்செய்வாளண்ண
என்றுமேயென்மாமி யியம்பிடவப்பொழுது
அம்மொழிதான்கேட்டு அருமையுள்ள என்தகப்பன்
கண்கள்சிவந்தெலவோ கடுங்கோபந்தானுகி
மீசைதுடிக்கவல்லோ முன்கோபத்தோடவரும்
என்னுடையமாமியாரை எட்டியுதைத்தாரப்போ
அப்போதுப்பாதகியும் அலறியேதானுமல்லோ
எட்டுக்குட்டிக்கரண மிட்டேல்லோதான்விழுந்தாள்
குட்டிக்கரணம்போட்டுக் கீழேயவள்விழுவே
அப்போதுதானுடனே யடவாகத்தானுமல்லோ

என்தகப்பன்கால்களையு மிருகையாலே பிடித்துக்கொண்டு
எய்தவனேநோகாம லம்பைநோவதுபோலும்
அப்போதுதகப்பனுக்கு யானேதுறைத்தேனென்றால்
எல்லாங்கடவுள்செய லாகவேதானிருக்க
எத்தனிடமாமியார்மேல் யேனேதானிப்பொழுது
கோபித்துக்கொண்டதினு லென்ன பிரயோசனம்
ஏதோநான்பாவஞ்செய்து யிருந்தபடியினுலே
துஷ்கிருத்தியங்களும் தோஷஞ்செய்தவளாலே
கடவுளுமென்னையிப்போ கண்டுதண்டித்தாரையா
என்னுடையஅத்தையை நீர்மொத்த வேண்டாமையா
பேணியென்தந்தைதனைப் பிரார்த்தித்தேனப்பொழுது
அவரும்மனமிரங்கி அடவாகயேதுரைப்பார்
கேளாயென்புத்திரியே கிழவியுடசேதிதன்னை
என்னையும்நோக்கியவள் யெழிலாகத்தானுமல்லோ
பெட்புடனேவந்தமல்லோ பெண்ணது கேட்டபோது
இவளுடையதுர்க்குணங்க ளெனக்குமிகத்தெரிந்தேன்
பெண்கொடுக்க மாட்டேனென்று பேசிதிராகரித்தேன்
அப்போதவளுமல்லோ அழுதுமிகவாடி
மாராத்துயரமுற்று மறுபடியுத்தானுமல்லோ
ஆயிரந்தரமல்லோ அவள்வாயுமோயாமல்
கெஞ்சிகெஞ்சியென்தனையும் கேட்டுக்கொண்டதினுலும்
சகோதரியாளென்றச் சார்பானபட்சத்தாலும்
கூடப்பிறந்தாள்மனம் நோகப்போகாதேயென்றும்
எண்ணியேதானுமல்லோ யிசைத்தெல்லோ யறியாமல்
கீர்த்தியுடன்மீன்றெடுத்து கிளிபோலேயான்வளர்த்து
பூனையுடக்கைதனிலே பிடித்துக்கொடுத்ததுபோல்
உன்னைவிவாகஞ்செய்து அறியாமல் நான்கொடுத்தேன்
தெரியாமலான்கொடுத்தேன் திண்டோளி கையிலுன்னை
அதற்கிதுலாபமாச்சு தென்றெல்லோயவர்சலித்து
என்தகப்பனுமல்லோ யிருக்கின்றவேளையிலே
அப்போதுயென்கணவர் அடவாகத்தானும்வந்து
என்னுடையதகப்பனுக்கு யெழில்நமஸ்காரஞ்செய்தார்

அப்போதுயென்தகப்பன் அவரையுந்தான்பார்த்து
வித்தையுடனப்பொழுது விளங்கவேயேதுகேட்பார்
சௌரியவானென்றுநீ சதுராய்பேர் வைத்துக்கொண்டு
உன்வீட்டுப்பெண்டுகளை யுனக்கடக்கத் திரமையில்லா
என்னவரும்படியாய் பெழுதினுயே பலகடிதம்
ஓயாமலெழுதினுயே யுத்தமனே நீயுமப்பா
துர்ப்பலமுள்ளயித்த வ்திரீகளிரண்டுபேரை
அடக்கசக்தியில்லாத ஆண்பிள்ளையானவ நீ
உத்தரங்கமதனில் உத்தமனே நீயுமப்பா
எவ்விதமாய்ச்சத்துருகளை எப்படி நீஜெயிப்பாய்
என்றெல்லோயென்தகப்பன் எடுத்துமிக்கூறி
பற்பலவார்த்தையாகப் பரியாசஞ்செய்யலுற்றார்
அப்போதுக்கேளடியே யருமையுள்ள தங்கையரே
என்புருஷனுமல்லோ என்தகப்பனுர்தனக்கு
கருத்துடன்தானுமல்லோ கடிதங்கள்தானெழுதி
வ்ரவழைத்ததாக வாகாகவப்பொழுதும்
என்தகப்பனுருடைய யெழிலானவார்த்தைகளால்
வெளியிட்டசெய்திதன்னை விளங்கவேயான்கேட்டு
சந்தோஷந்தானுகி சரீரங்கள்பூரித்தும்
என்னுடையத்துயரமெல்லா மெங்கையோதான்பறந்து
என்புருஷன்மீதினிலே யியம்பக்கேள்தங்கையரே [ம்
இருந்தமனஸ்தாபமெல்லா மெங்கையோவப்பொழுதே
ஒருகடிகைக்குள்ளாக ஓடிப்பறந்ததுவே
அக்ஷணமேயென்விலங்கை அடவாகத்தானுமல்லோ
கழட்டியெரிந்தார்கள் கடுகெனவேயப்பொழுது
என்னுடையமாமியாறும் எனக்குநேமித்திருந்த
விடுதியைவிட்டுயென்னை விடுதலைசெய்தார்கள்
உடனேபயித்தியமும் ஓடித்துலைந்ததுவே
பேயும்பறந்ததுவே பாவிமாமிக்கலங்க
பழையப்படியாய்நான் பார்க்கவேதங்கையரே
என்னுடையப்புருஷனுடன் எழிலாகத்தானுமல்லோ
அடிக்கடிச்சந்திக்கவும் அவருடன்சம்பாஷிக்கவும்

அன்போடுத்தா னுமல்லோ யானுமேயாரம்பித்தேன்
இரவினில்சயனிக்கும் யென்புருஷன் பள்ளிக்கேதான்
பாராக்கொடுத்திருந்தப் பாவிமாமி நாத்தியரும்
சனியன்துலைந்ததுபோல் அவருந்துலைந்தார்கள்
என்தகப்பன்வந்தமுத லிப்பாவியிருவர்களும்
பெட்டியில்பாம்பதுபோல் பேசாதடங்கினர்கள்
இப்படிக்காகவல்லோ யிருக்கின்றநானேயிலே
என்னுடையக்கொர்ப்பமது எழிலாகத்தான்முதிர்ந்து
பத்தாமாதத்தினிலே பரிவாகத்தங்கையரே
பாலசூரியனேப்போல் பாலகனேப்பெற்றெடுத்தேன்
கண்டுமகிழ்ந்தெலவோ காணவேதங்கையரே
மனமகிழ்ந்துப்புருஷனேமெங்கையரேவாழ்த்திருந்தே
என்றெல்லோகுணபூஷணி யியம்பிமுடித்தாளே. [ன்

பொது.

எழிலாகயிப்புவியி லியம்புவேன்கேட்டிடுவீர்
இந்தக்கதையதனை யெடுத்துப்படித்தோரும்
சித்தமுடன்வாசிக்க செவிகொடுத்துக்கேட்டவரும்
இந்துக்களானதொரு யானதோர்நம்மவர்க்கும்
நமதுதேசத்தாரும் நண்ணுவதென்னவென்றூல்
ஸ்திரீகளேபற்றியல்லோ சிறக்கவேதான்மிகவும்
அறியவுலகுதனில் அவமதிக்குறூர்களென்றும்
வள்ளயெவர்களுக்கும் விளங்குகின்றதேயலவா
அதனையறியவேதான் அறைகுவேன்கேள்புவியோரே
விளங்கக்குடும்பத்திலோர் விவாகமதானபெண்ணும்
மகிட்சியுடன்தானெலவோ மாமியார்வீடுதனில்
நூதனமாகவேதான் வந்துநுழைந்தபின்பு
இல்லறத்தைஅனுஷ்டித்து எழிலாகத்தானுமல்லோ
தன்னுடையப்புருஷனேடு தக்கப்படியாக

அன்புகள்பாராட்டி அறிவையர் நடப்படுவை
பார்த்துசகியாமல் பகறுவேன்கேட்டிடுவீர்
நாற்றிமார்மாற்றுன்றுய் நண்ணியவோரகத்தி
இவர்கள்முதல்னவரு லியம்பிடக்கேட்டிடுங்கள்
போருமைவஞ்சனைகள் பீடித்துவருகிறதை
பரிவாகத்தானுமல்லோ பார்த்துவருகின்ற
அக்கம்பக்கத்திலுள்ள யானவீட்டுக்காரர்களும்
சொத்தங்களுள்ளயின்னம் சுற்றத்தார் மற்றவரும்
அவமதிப்பாகப்பேச அவர்க்குமிட மாகிறது
அதினுலேஸ்திரீகளிடப் பெருமைக்குறைகிறது
அதுவுந்தவிரவேதா னறைகுவேனின்னமுங்கேள்
மருகிகளானவரை மாமியார்வீட்டாரும்
குரூரமமாகவேதான் கொண்டுநடத்தலினுல்
மாதுயவர்களுக்கு மனவுக்கமுமழிந்து
பேயும்பயித்தியமும் பிடித்தவர்கள்போலும்
மாதுயவர்களுமே மருளுகையிற்சொல்லுவேன்கேள்
காட்டேறிசங்கிலிமுனி கருப்பண்ணன் முதலியதோர்
துஷ்டதேவதை துடர்ந்துக்கொண்டதுவோஎன்றும்
பலவிதமானப்பேய்கள் பற்றிப்பிடித்ததென்றும்
பேரதுத்தான்வகித்துப் பேசியே நிட்சயத்தும்
வயறுவளர்க்கின்ற வரும்பாவியானதொரு
பூசாண்டிவேசாண்டி பூசாலியானதொருக்
கொடும்பாதகரையழைத்துக் கூசாமலவர்கள்கையில்
ஒன்றுமறியாமல் ஒப்பிவித்துவிடுகுரூர்கள்
அதுவேசமையமென்று அக்கொடும்பாதகர்கள்
திருநீரென்னுமொரு தேடியச்சாம்பலுடன்
பூனைகாஞ்சலென்னுமொரு பொல்லாத மூலிகையை
சேர்த்துவிபூதியுடன் செய்கின்றசூதைக்கேளீர்
ஸ்திரீகளின்மீதிலேதான் சிராகத்தூவிவிட்டும்
சாம்பிராணிப்புகையினிலே சாற்றுவேன்கேட்டிடுவீர்
பேய்மிரட்டிவேரதனை பெட்புட னிடித்தலவோ
கூடக்தலத்துப்புகைக் கொப்பெனவேதான்காட்ட

உடுக்கையைத்தட்டிக்கொண்டு ஓகோகோவென்றும்
பிரம்பாலும்தோல்வாராலும் பெருத்ததடியினாலும்
குரூரமாகவேதான் கொண்டமட்டும்மடித்தும்
மட்டுமறியாதை மதிப்புகள்வையாமலும்
அவமறியாதையாக யவர்களுமப்பொழுது
தங்கள்வாயில்வந்தபடி தாறுமாறுப்பேசுறார்கள்
ஐயோயதற்குமேதான் அப்பெண்களென்னசெய்வார்
தங்களிடமாமிவீட்டில் தானவர்களடைகின்ற
கஷ்டங்கள்போதாமல் கழறுவேன்கேட்டிடுவீர்
கூறயெவர்களுமே கொடியசண்டாளரான
பொல்லாதப்பாதகராம் பூசாலிகளிடத்தில்
நேரும்யிம்சைக்கு நங்கையர்களும்பயந்து
பூசாலிச்சொற்படிக்குப் பேய்போலேதானுடி
தங்களுடக்கஷ்டங்களே தான்சகித்துக்கொள்கிறார்கள்
எவற்குஅடுக்குமிது யிதுயென்னப்பரிதாபம்
ஆற்குஅடுக்குமிது அப்யோவெகுதோஷம்
நாட்டினில்வாழுகின்ற நம்மவர்கள்தானுமல்லோ
சற்றுகிலும்ஸ்திரீயின்மேற் சார்ந்துமனமிறங்கி
சாந்தமோடுதானுந் தாமிருக்கலாகாதா
உலகினில்வாழுகின்ற உற்றதோர்மனிதரையும்
பிடித்துமேகொள்ளுகின்ற பேயும்பிசாசுமுண்டா
எனுயிதின்பேரில் இப்படிநம்பிக்கைவைத்து
நண்ணியேவாழுகின்ற நமதுதேசத்தவரும்
வீணகையெண்ணியெண்ணி விருதாவாய்த்தானுமல்லோ
மோசத்திலும்பெறிய முழுமோசம் போகவேண்டும்
காசினிதன்னிலேதான் காணவேஸ்திரீகளுமே
சாந்தமனமிறக்க முள்ளவர்களாதலினல்
அவர்களுக்குத்தான்னேரும் அடவானகஷ்டமதால்
மனகுழப்பமுண்டாகி மவருந்தவிப்பதன்றி
வேரேபேயுமிருந்து வந்தவர்களைப்பிடித்தும்
ஆட்டுகுதுயென்றசொல்லு அதுவீண்தப்பாகையாலே
அறிவாளரிதையறிந்து அன்பாகஸ்திரீகளையும்

அவர்களுடைய தொரு யான நிற்பாக்கியமாம்
ஸ்திதியிலிருந்துமல்லோ தாநீக்கவேண்டுமென்றும்
எண்ணுகுவோமென்ணுகுரோம் யாவருமுயலவேதான்
மருமக்கள் துயர் நீங்க மானிலந்தழைத்தோங்க
பாடிப்படித்தவரும் பரிவாகக்கேட்டவரும்
சொல்லிப்படித்தவரும் சுத்தமுடன் கேட்டவரும்
எல்லையுலகளந்த யெம்பெருமான்கோத்திரம்போல்
நீடியுலகமீது நெடுநாளும்வாழிவாழி
வாழிவாழியென்று வரமளித்தாரீஸ்வரனர்.

மருமக்கள் துயர அம்மானை

முற்றுப்பெற்றது.

சம்பூர்ணம்.

விளம்பரம்.

சென்னை புரசை பெருமாள்பேட்டை வல்லம் பங்காரு செட்டிவீதி, 4-வது, நெம்பர்வீட்டில் ஸ்தாபித்திருக்கும் ஸ்ரீசுந்தரவிலாசஅச்சுக்கூடத்தில் எல்லாவித புத்தகங்களும் தபர்முத்திரைகளும், ஆயுள்வேத அனுபோக அவிழ்தங்களும், உயர்ந்த அத்தர்வாசனைத்திரவியங்களும், தங்கவிலிட் நகைகளும், ஜர்மன் சில்வர் நகைகளும், யின்னம் பலவிதமான சாமான்களும், விலாசரசமாய் அனுப்பப்படும்,

¼-அணாலேபில் அனுப்பிதங்கள்விலாசம் தெரிவித்தால் 1-அணாபெறும்படியான 2-கேட்லாக் அனுப்பப்படும், இப்படிக்கு,

பூ. சு. குப்புசாமிமுதலியார்.

ஸ்ரீசுந்தரவிலாசம்பிரஸ், பிரம்பூர்பாறக்ஸ்போஸ்ட், மதராஸ்.

கடவுள் துணை.

புதிதாய் அச்சிட்ட

(உக) கதைகளடங்கிய.

கலியுகவிநோதகதை.

இதிலடங்கிய கதைகளானது இதுவரையிலும் யாவராலும் அச்சிடாதும் யாவரும் கேட்டிராத்துமான அதிகவினோதமாகியகதைகள்.

1. வது, சாஸ்திரத்தைநம்பி ஜெயமடைந்தவன்கதை. 2. வது, வீவேகமற்ற வீரகோபாலன்கதை. 3. வது, ஸ்ரீதேவிக்கும் பூதேவிக்கும் வழக்குண்டானகதை. 4. வது, கொண்டவனைக்கொல்லினைத்த குண்டோதரிக்கதை. 5. வது, வர்த்தகக்குமாரன் வேசையால்கெட்டகதை. 6. வது, வெரிமுண்டன் கொடுக்குக்கதை. 7. வது, புகையிலையின்மகத்துவக்கதை. 8. வது, சோதிவல்லவன்கதை. 9. வது, பிராமணப்பெண்கதை. 10. வது, வயித்தியன்கதை. 11. வது, சுயம்பாகிக்கதை. 12. வது, சந்தியாவந்தனக்கதை. 13. வது, ராஜபத்தன்கதை. 14. வது, மூக்கரையன்கதை. 15. வது, ஆயிரம்புளுவன்கதை. 16. வது, அரக்கமாட்டவன்சுத்தில் அன்பத்தெட்டறுவா லென்றகதை. 17. வது, பெண்பார்க்கும்தூதன்கதை. 18. வது, பிராமணன் பூனையாகப்பிறந்தகதை. 19. வது, கெட்டகுமாரன்கதை. 20. வது, மதிகெட்டான்கதை. 21. வது, வைராக்கியராஜகுமாரன்கதை. இவைகள் அடங்கியது,

புஸ்தகம் 1-க்கு வீலை அணு-8.

சத்தியவசனிசரித்திரம்.

இது ஓர் அற்புத ஆனந்த

(கதா ரசக்யானம்.)

நண்பர்காள்!

உலகில் வசித்துலாவும் மாந்தர்களின் மனதைச் சீர்திருத்தஞ் செய்யுபடியாக அறிஞரா லியற்றிய அநேக கதா ரசக்யானங்களே வாசித்திருப்பினும் தற்சமயத்திற் கோர் அஸ்த பூஷணம்போல் சிறப்பெய்தி வையத்தோர்க்கறிவுறுத்தும் அற்புதானந்த கதா ரசக்யானமாகிய இந்த சத்தியவசனிசரிதையை வாசிப்போர் யாதாமொரு சபையிலுஞ்சென்று சாதுர்ய வார்த்தையாடுதற்கும் வஞ்சகர் செய்யும் தந்திர மோசங்கட் கஞ்சாமல் கீர்த்திப் பிரகாசமாய் வாழ்ந்திருப்பர் அன்றியும் இதைவாசிக்குந்தோறும் வேடிக்கைக் கதாசாரமாயிருப்பினும் நன்மதி விளங்கும் நவரசலங்காரமா யிருக்கும்.

புத்தகம் 1-க்கு வீலை அணு-8.

ஒரேதருணியில் பத்துபுத்தகம் மொத்தமாய் வாங்குபவர்கட்கு இரண்டு புத்தகம் இனாமாக கொடுக்கப்படும்.

இப்படிக்கு.

பூ. சு. கோவித்துராஜ முதலியார்.

சூளை போஸ்ட் மதராஸ்.